கனடாத் தமிழர் இணையம்
வழங்கும்

# அன்புக்கரங்கள் 2010

ஒற்றுமையே பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Worldwide Money Transfers
Currency Exchange
Cheque Cashing

Cash Point®

*The Buck Starts Here!*

3852 Finch Ave. E. Unit G03
Scarborough, ON. M1T 3T9
**Tel : 416-284-7000**
Fax : 416-284-4562

*Worldwide Money Transfers*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாத் தமிழர் இணையம்

வழங்கும்

# அன்புக் கரங்கள் ~ 2010

## பிரதம விருந்தினர்

வைத்தியக் கலாநிதி ஜெராட் பிரான்சிஸ் அவர்கள்

(சமூக ஆர்வலர், இன உணர்வாளர், செயற்பாட்டாளர், நாடு கடந்த தமிழீழ அரசின் பேராளர்)

## சிறப்பு விருந்தினர்:

திருமதி. சுகுணம் பரராஜசிங்கம்

(முன்னாள் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர், திரு. ஜோசப் பரராஜசிங்கத்தின் பாரியார்)

சனிக்கிழமை, மார்கழி 18 ஆம் திகதி மாலை 5.00 மணி

ஐயப்பன் கலாச்சார மண்டபம்

635 Middlefield Road, Scarborough, ON. M1V 5B8.

இணையத்தின் தொடர்புகளுக்கு: 416 273 8305

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

## கனேடிய தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள் உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!

எங்கு உள்ள நாம் ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழைச்சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாளர் அறிக்கை

## தமிழ் அன்பர்களே!



கனடாத் தமிழர் இணையத்தின் (இணையம்) உருவாக்கத்தில் அரும் பாடுபட்ட தாபகர்களுள் ஒருவன், இணையத்தின் அங்குரார்ப்பணகாலத் தலைவன், இணையத்தின் தற்போதய போசகன், இம் மலரின் ஒருங்கிணைப்பாளன் என்ற பின்னணியில் சில விடயங்களை உங்களிடம் முன்வைக்க விளைகிறேன்.

முள்ளிவாய்க்காலில் மே 19, 2009 இல் தமிழர் உரிமைப் போராட்டம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் புலம்பெயர்ந்த மண்ணில் தாய் மண்ணின் விடுதலைக்காக எங்கள் பங்கிற்கு இரவு பகலாக, மழை என்றும் குளிர் என்றும் பாராது வீதிகளில் இறங்கி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்ட நாமெல்லாம் செய்வதறியாது மிக்க மன உளைச்சலுடன் சோர்ந்து போனோம். தொடர்ந்து எதைத்தான் செய்யலாம் என்று சிந்தித்துக் குளம்பியிருந்த தமிழ்த் தேசீய உணர்வாளர்களை ஒன்று திரட்டினேன்.

இவ்வாறு 'தமிழர் உரிமை' என்னும் ஏக குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட இணையம், மே 02, 2010 இல் நாடு கடந்த தமிழீழ அரசுக்குத் தனது நேசக் கரத்தை நீட்டி, கனடாவில் வேறு எந்தவொரு அமைப்பும் முனையாத நிலையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்து. நாடு கடந்த தமிழீழ அரசு என்றால் என்ன, நாடற்ற நிலையில் இன்று தமிழர் தம் உரிமைகளை மீளப் பெறுவதற்காக அவர்களுக்கு இருக்கக் கூடிய வழிகள் என்ன, நாடு கடந்த தமிழீழ அரசு சாதிக்க நினைப்பவை என்ன என்பன போன்ற விடயங்களை விளக்கி ஓர் புரிந்துணர்வை மக்களிடையே ஏற்படுத்த இக் கூட்டம் வழி வகுத்தது.

கனடாத் தமிழர் இணையத்தினது யாப்பு இணையத்தின் நிர்வாக சபை அங்கத்தவர்களின் பெருமுயற்சியுடன் எமது நோக்கத்தைப் புலப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு அதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பும் தயாரிக்கப்பட்டது. இவ் இணையத்தில் அங்கத்தவராக இணைபவர்கள் தயவு செய்து இந்த யாப்பு விதிகளைப் படித்து அது பற்றிய தெளிந்த அறிவைப் பெற்றுக் கொள்ளுவது இணையத்தின் ஆரோக்கியமான நீண்ட காலச் செயற்பாடுகளுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

ஒற்றுமையே பலம். உலக நாடுகளின் உதவியுடன் நாம் அழிக்கப்பட்ட நிலையில் அந்த உலக நாடுகளை வென்று எமது இலட்சியத்தில் நாம் வெற்றி பெறுவதற்கு எம்மிடையே இருக்கக் கூடிய ஒற்றுமை ஒன்றே எமது பலம் என்பதை யாரும் மறக்கக் கூடாது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம், ஒக்ஸ்பேட் பல்கலைக் கழகத்தில் உரையாற்ற என்று பிரித்தானியா சென்ற மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்கவும் அவர் பரிவாரங்களும் பெருத்த அவமானத்துடன் நாடுதிரும்பியமை. இது உலகத் தமிழினம் அனைத்திற்கும் தமது பலத்தை உணர்ந்து கொள்வதற்கு அரியதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இணையத்தில் இணைந்து செயலாற்ற இளைய தலைமுறை முன்வரவேண்டும்.
ஒற்றுமையே பலம்.

இதழ் ஒருங்கிணைப்பாளரும் இணையத்தின் முன்னாள் தலைவரும், தற்போதய போசகருமான

வருணகுமாரன் கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் இதயத்திலிருந்து...



பூமிப்பந்தில் ஈழத்தமிழராய்ப் பிறந்தோம். அல்லது அவர்களின் குடும்பத்தவராகவோ, நலன் விரும்பிகளாகவோ உள்ளோம். ஈழத் தமிழரும் மனிதர்தானே. உலகில் மனித சமுதாயங்கள் அனுபவிக்கும் மனித உரிமை-களை, உலகச் செல்வங்களின் பங்குகளை நாமும் பெறத்தானே வேண்டும். பிறந்தது முதல் வாழும் வரை மனிதராகிய நாம் சுதந்திரத்தையும், இன்பத்தையுமே தேடுகின்றோம். அதற்காகவே வாழ்வு பூராவும் போராடுகின்றோம். வாழ்க்கை என்பதே போராட்டம் தானே. வெற்றி பெற்றாலும், இல்லை தோல்வி மேல் தோல்வி வரினும் தொடர்ந்து உயிருள்ளவரை வாழ்க்கைப் போராட்டம் தொடரவே செய்யும். வாழ்வு நிறைவு பெற்றாலன்றி அந்த வாழ்வின் போராட்டம் நின்றுவிடப் போவதில்லை.

நெடுங்காலமாக, அரசியல் உரிமைகள் வாழ்வுரிமைகளை இழந்து தவிக்கும் ஈழத்தமிழராகிய நாம் எமது உரிமைகளுக்காக, வளமான மனித வாழ்வுக்காகப் போராடி வருகின்றோம். போராட்ட வடிவங்கள் காலத்துக்குக்காலம் மாறலாம். ஆனால் போராட்ட நோக்கமும், தேவையும் மாறவேயில்லை. எமது போராட்டம் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்ட பின், சர்வதேசச் சதி வலையால்தான் அது ஏற்பட்டதென்பதையும் மனதில் கொண்டு சர்வதேச ஆதரவை வெற்றி கொள்ள ஏற்றவாறு நமது போராட்ட வடிவத்தை மாற்றி முற்றிலும் வெளிப்படையாகவும் ஜனநாயக முறையிலும் அமைக்க வேண்டிய தேவை உள்ளது. இன்றைய சூழ்நிலையில் ஆயுதபலத்தைத் துறந்து மக்கள் ஆதரவு பலத்தில் இயங்க வேண்டியுள்ளது. ஆதரவு பலம் - அதற்குத் தேவையா-னது ஒற்றுமை, மக்களின் ஒற்றுமைதான். எந்த இருவரது அபிப்பிராயங்களும் 100% ஒன்றாக இருக்க முடியாது. பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்தை எல்லோரதும் அபிப்பிராயமாக ஏற்றுக்கொண்டு அதன் வெற்றிக்காக அனை-வருமே மனப்பூர்வமாகச் செயற்படுவதுதான் ஜனநாயகத்தின் அடிப்படையாகும். ஒற்றுமை என்றால் தமிழருக்கு ஒரேயொரு அமைப்புத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. பல்வேறு முகங்களோடு பல்வேறு திசைகளில் பல்வேறுவகையாக எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். எல்லா வகையான செயற்பாடுகளையும் ஒரே அமைப்பு முன்னெடுக்க முடியாது. எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைத்திருப்பது விவேகமானதல்ல. ஆனால் இனத்தின் நன்மை என்ற ஒரே நோக்கம், குறிக்கோளுக்காகச் செயற்படும் அனைத்து அமைப்புகளுக்கிடையேயும், நட்புறவும், புரிந்துணர்வும், ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். பொதுமக்கள் எந்தவொரு அமைப்பின்கீழும் தம்மை முத்திரைகுத்திப் பிளவு படுத்தாமல் இன நன்மைக்காக அவ்வப்போது அமைப்புகள் முன்னெடுக்கின்ற அத்தனை செயற்பாடுகளிலும் பங்கேற்க வேண்டும். இந்த வகையில் மக்களை ஒன்று படுத்தவும் அமைப்புகளுக்கிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தவுமே பொதுமக்களின் ஒருங்கிணைப்பாக 'கனடாத்தமிழர் இணையம்' உருவானது. இதில் எமக்கு மக்களின் பேராதரவும் அமைப்புகளின் ஆதரவும் நிறையவே கிடைப்பதையிட்டுத் திருப்தி அடைகிறோம்.

தாயகத்தில் உள்ள மக்களும், புலம் பெயர்ந்த மக்களும் சர்வதேசத் தமிழரும் சேர்ந்துதான் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தோம். ஆனால் அது முள்ளிவாய்க்காலில் முடங்கிவிட்ட காரணத்தால், நாசங்களையும், இழப்புகளையும், வேதனைகளையும் இன்று முழுமையாகச் சுமப்பவர்கள் அந்த வன்னி மக்கள் தான். இது மிகப்பெரிய கொடுமை. எல்லோரும் சேர்ந்து செயற்படுவது, வெற்றியும் நன்மையும் வந்தால் அனைவரும் பங்கிடுவது, ஆனால் தோல்வியும் வேதனையுமென்றால் வன்னி மக்கள் மட்டுமா சுமப்பது? அந்த வன்னி மக்களது, ஈழ மக்களது துன்ப துயரங்களில் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்த அத்தனை தமிழருக்கும் பங்குண்டு. பொறுப்புண்டு. அதை உதாசீனம் செய்வதோ தட்டிக்கழிப்பதோ மனிதத் தன்மையே இல்லை. அப்படியான வாழ்வு மனிதவாழ்வுமல்ல.

நாங்கள் புலம்பெயர் தமிழர் என்ன செய்யலாம்:

இன்று இலங்கையில் இருக்கும் சர்வாதிகாரமுள்ள, மிகப் பலம் வாய்ந்த மகிந்த அரசைக் கேள்வி கேட்கவோ, நெறிப்படுத்தவோ, தட்டிக்கேட்கவோ உள்நாட்டிலும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி யாருமே இல்லை. சர்வதேச தொண்டு நிறுவனங்கள் படிப்படியாக வெளியேற்றப்படுகின்றன. தமிழருக்கு பெருமளவில் உதவிகள் கிடைக்கக் கூடாதென்பதில் அரசு கவனமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரசை ஆதரிக்காத உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் அங்கே செயற்பட வாய்ப்பு இல்லை. இந்த வகையில் மிக மோசமாகச் சிக்குண்டு கிடக்கும் மக்களுக்கு உதவவேண்டுமானால் நாம் மிகக் கவனமாக, சாதுரியமாக அரசை எதிர்க்காமலும், அதே நேரம் அரசின் எதிரிடையான செயற்பாடுகளுக்கு உதவாமலும், எமது நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலும் செயற்பட வேண்டும். அந்த மக்களின் உடனடித்தேவைகளான பிள்ளைகளின் கல்வி. அநாதைகளின் பராமரிப்பு, விதவைகளின் வாழ்வாதாரம், ஊனமுற்றோருக்கான உதவி போன்றவற்றையே நாம் கவனிக்க வேண்டி உள்ளது.

எல்லோருக்கும் பொதுவான பாரிய வேலைத்திட்டங்களைச் செய்யும் வாய்ப்புகள் இல்லாவிட்டாலும் சிறிய சிறிய வேலைத்திட்டங்களாக, கூடியளவு தனித்தனி நேரடி உதவிகளாக நம்பகரமான தொண்டர்களூடாகச் செயற்படுத்தும் வாய்ப்புகள் நிறையவே உண்டு. ஏற்கனவே பல தனிப்பட்டவர்களும் அமைப்புகளும் கச்சிதமாக இதைச் செய்கின்றார்கள். ஆனால் செய்யப்பட வேண்டியவை மிக அதிகமாக - பாரிய அளவில் இருக்கின்றது. அதனால் நாமும் இயன்றளவு செய்யத்தானே வேண்டும். நாமும் தமிழருக்காகவும் மனிதநேயச் செயற்பாடுகளுக்காகவுமான அமைப்பு என்பதால் எமது பங்கைச் செய்வதற்காக இந்தக் கலைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளோம். டிசெம்பர் மாதக் கடைசி இருவாரங்களும் இங்கு எமக்கு விடுதலைக் காலமாகும். மக்கள் குழுக்கள் குழுக்களாக ஒன்றுகூடி மகிழ்ச்சியாய்ப் பொழுதைக் கழிப்பார்கள். இந்த நிகழ்ச்சி அவர்களுக்கெல்லாம் ஒரு சிறந்த தரமான பொழுதுபோக்காக அமைகின்ற அதே வேளையில் அதன்மூலம் கிடைக்கின்ற உதவி மூலம் நம் தாயக உறவுகளுக்கு உதவக்கூடியதாயும் இருக்கும். நாமும் வாழுவோம், உறவுகளையும் வாழ வைப்போம். மக்கள் சேவையே மகேசன் சேவை.

மிக்க நன்றியுடன்
வின். மகான்
தலைவர், கனடாத் தமிழர் இணையம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Transnational Government of Tamil Eelam

## நாடு கடந்த தமிழீழ அரசு

www.govtamileelam.org info@govtamileelam.org



கார்த்திகை 28, 2010

தலைவர்
கனடாத் தமிழர் இணையம்

அன்புடையீர்!

எங்கள் கலை, கலாச்சாரம், பண்பாட்டை பேணிக்காப்பது எமது கடமை என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் கனடாத் தமிழர் இணையம் நடாத்தும் **அன்புக் கரங்கள்** நிகழ்வு கண்டு அளவில்லா ஆனந்தமடைகிறேன்.

அதே வேளை, எங்கள் தாய்மண்ணில் வாழும் எம் உடன்பிறப்புகளுக்கு நாம் உதவ வேண்டும் என்ற உத்தமமான உணர்வையும் இந்த நிகழ்வில் உள்ளடக்கி இருப்பது இந்த நிகழ்வின் தரத்தை மட்டுமல்ல மற்றவர்களுக்கும் இது ஓர் எடுத்துக் காட்டாக அமைவது இந்த் நிகழ்வின் இன்னொரு சிறப்பம்சமாகும்.

பாட்டுக்கு பவசத்தயும், ஆடும் கலைக்கு அர்த்ததையும் கொடுத்தத நாம், அந்தக் கலைகள் அழியாது காப்பதும் எமது கடமை என எண்ணி செயற்படும் கனடாத் தமிழர் இணையத்தின் நிர்வாகத்தையும், அதன் அங்கத்தவர்களையும் நாடுகடந்த தமிழீழ அரசு சார்பில் பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன்.

இந்த நிகழ்வு வெற்றிகரமாக அமையவேண்டும், இதுகண்டு மற்றைய அமைப்புக்களும், சங்கங்களும் விளையாட்டுக் கழகங்களும் பல நிகழ்வுகளை நடாத்தி வாடிநிற்கும் எம் உறவுகளையும், வரண்டுபோகும் எம் கலாச்சாரத்தையும் பேணிக்காக்க முன்வர வேண்டும். இதுவே எம் ஆசை, விருப்பம்.

தங்கள் அன்புள்ள,
கலாநிதி ராம் சிவலிங்கம் Ph.D, B,Sc(Hons), FIMechE, C.Eng, P.Eng
பிரதிப் பிரதமர், கல்வி, கலாச்சாரம், உடல்நல மந்திரி - நாடுகடந்த தமிழீழ அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PK Accident Benefits

**FREE Initial Consultation**

**FREE Legal Advice from reputable Lawyers**

**No Retainer Fee**



**We are specialized in Motor Vehicle Accident Benefit Claims**

**We fight for your rights**

Income Replacement Benefit to Replace your loss of earnings
Housekeeping / Home Maintenance Services / Attendant Care Benefit
Caregiver Benefit / Lost Educational Expenses / Slip and Fall

**நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?**

பிரபல சட்டத்தரணிகளுடன், காப்புறுதி ஸ்தாபனத்தில் அனுபவம் பெற்ற சட்டத்தரணியும் (Former Insurance Defense Counsel ) எங்களுடன் சேர்ந்து பணியாற்றுகிறார்கள்.
நஷ்ட ஈடு கோரும் வகையில் இழைக்கப்படும் (Not at Fault) வாகன விபத்துக்களுக்கும் (Tort Claims) நியாயமான கொடுப்பனவு பெற்றுத்தரப்படும்.

**Are you involved in a Motor Vehicle Accident?**

We work in association with leading and reputable lawers. These associates have specific experience in Motor Vehicle Accident matters and will be great assistance in the success of your TORT Claims.

## Singham Karthigesu

Licensed Paralegal
The Law Society of Upper Canada

1200 Markham Rd., Suite 105
(Markham/Ellesmere)
Toronto, Ontario M1H 3C3
**Tel: 416.283.8000**
Fax: 416.283.3567

3351 Markham Rd., Unit A118
(Markham/Steeles)
Toronto, Ontario M1X 0A6
**Tel: 416.293.0077**
Fax: 416.293.0071

**We do not charge any fee except on the final settlement**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனுக்கு எதிர்காலம் உண்டா?



ம. க. ஈழவேந்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் (இலங்கை)
நாடு கடந்த தமிழீழ அரசின் கனடாப் பேராளர்

தமிழனுக்கு எதிர்காலம் உண்டா என்ற கேள்வி சிக்கல் நிறைந்தது. எளிதில் பதில் அளிக்க முடியாது என்பது மட்டுமல்ல, இதற்குப் பதில் அளிப்பது கடினம் என்று தான் கூற வேண்டி இருக்கும். ஆனால் இந்தக் கேள்வி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பப்பட்ட கேள்வியாக விளங்குகிறது. பாட்டுக்கொரு புலவன் பாரதி மறைந்தது 1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் தேதி. அவன் மனதிலேயே இக்கேள்வி எழுந்துள்ளது. 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று ஒரு பேதை உரைத்தான் என்று கோபம் கொள்ளும் பாரதி, மற்றுமோர் இடத்தில் 'விதியே விதியே தமிழ்சாதியை என்ன செய்ய நினைத்தாய்?' என்று கேள்வி கேட்டு ஏங்குகிற காட்சியையும் காண்கிறோம்.

## தமிழன் வாளாத நாடில்லை. ஆனால் தமிழனுக்கென்று ஒரு நாடில்லை:

'தமிழன் வாழாத நாடில்லை, ஆனால் தமிழனுக்கென்று ஒரு நாடில்லை' என்று பேசுமளவுக்கு, ஏறக்குறைய 60 நாடுகளில் சிதறுண்டு வாழ்கிறான் தமிழன். உலகின் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவன் என்ற முறையில் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற தமிழர் நிலையை விளக்க என் உள்ளம் விரும்புகின்றது. ஆனால் சில இட நெருக்கடி காரணமாக அவை அனைத்தையும் இங்கு விளக்குவது கடினம். தென்னாபிரிக்கா, மொரீசியஸ், பிஜி போன்ற நாடுகளில் இந்திய வம்சாவழித் தமிழ்மக்கள் மூன்றாம், நான்காம் தலைமுறையாக வாழ்கிறார்கள். கனடாவிலும் கானா நாட்டைச் சேர்ந்த, 3ம், 4ம் தலைமுறைத் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். தென்னாபிரிக்காவிலும், மொரீசியசிலும், பிஜி தீவுகளிலும் தமிழர் தம் தனித்துவத்தைப் பேண முனைகின்றனர். தமிழைப் பேச அவர் முயல்கின்ற போதிலும் தமிழ் பேச முடியாத தத்தளிப்பு நிலவுகிறது. கனடாவில் வாழ்கின்ற கானாவிலிருந்து வந்த தமிழர்கள் தமிழை முற்றாக மறந்த நிலையில் இருக்கின்றனர். தாங்கள் தமிழர் என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. ஏறக்குறைய 1827 இல் இங்கு வருகை தந்த இவர்கள் மூன்னூறு ஆண்டுகள் உருண்டோடிய நிலையில் தாம் தமிழர் என்ற உணர்வே அற்ற நிலையில் தம்மை அறியாமலே சில தமிழ்ப் பெயர்களைத் தாங்கிக் கொண்டு வாழ்கிறார்கள். இந்த நிலை தமிழகத் தமினுக்கும், ஈழத்தமிழனுக்கும் ஏற்படக் கூடாது.

## தமிழகத் தமிழனும், தமிழீழத் தமிழனும் ஒப்பு நோக்கு

தமிழகத் தமிழனும், தமிழீழத் தமிழனும் அழிந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் ஒப்பு நோக்குகையில் ஒரு வேறுபாடு உண்டு. தமிழகத் தமிழன் தான் அழிகிறான் என்று உணராமல் அழிந்து கொண்டிருக்கிறான். ஈழத்தமிழன் பெரும்பான்மையோர் தாம் அழிகிறோம் என்பதை உணர்ந்து கொண்டு ஏதோ செய்ய வேண்டும் என்ற நிலையில் போராடிக் கொண்டும் வாழ்கிறார்கள். தமிழகத் தமிழர்கள் அனைவர் மீதும் நான் குற்றம் சுமத்தவில்லை. ஆனால் விதிவிலக்காக தமிழையும் தமிழரையும் வாழ்விப்பதற்கு தற்கொலை செய்த தமிழக் தமிழர்களை நாம் மறப்பதற்கில்லை. இந்தித் திணிப்பை எதிர்த்துத் தற்கொலை செய்து மறைந்த மாவீரர்களை நாம் இங்கு மறப்பதற்கில்லை. ஈழத்தமிழர் இன்னல் கண்டு வெதும்பி அழுது தம்முயரை மாய்த்த முத்துகுமாரனை நாம் மறப்பதற்கில்லை. அவர்கள் அனைவருக்கும் நாம் தலைசாய்த்து வணக்கம் செலுத்துகின்றோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் வடமொழியின் வல்லாண்மைக்கு அடிமையாகி வடமொழிப் பெயர்களைப் பெருமளவுக்குத் தாங்கிக் கொண்டிருந்தார்கள் தமிழர்கள். இன்று சுவாமி வேதாசலம் என்ற முத்தமிழ் அறிஞர் மொழியை முற்றாக ஆய்ந்த நிலையில் சுவாமி வேதாசலம் என்ற பெயரை மறைமலை அடிகளார் என மாற்றியதன் விளைவு பெயர் மாற்றம் உட்பட தமிழ் நாட்டில் மீண்டும் மறுமலர்ச்சி உருவாகியது. தமிழ் மன்றங்களிற் தமிழ் தலைதூக்கியது. கோயில்களிலும் தமிழ் வழிபாடு வேண்டும் என்ற குரலும் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. வடமொழி வல்லாண்மையை அடுத்து ஆங்கில ஆதிக்கத்துக்கு இன்று தமிழர்கள் ஆளாகியுள்ளதன் விளைவு தமிழர் தமிழ் பேசாது தமிங்கலம் பேசுகின்றனர். அம்மா, அப்பா, மாமா என்ற சொற்களுக்குப் பதில் டடி, மம்மி, அங்கிள் என்ற சொற்கள் தமிழ் மக்களின் நாவில் நடம்புரியத் தொடங்கியுள்ளன. வடமொழி வல்லாண்மை ஒருபுறம், ஆட்சி மொழி என்ற முறையில் ஹிந்தி ஆதிக்கம், உலக மொழி என்ற பெயரில் ஆங்கிலம் அரசோட்ச முயல்கின்ற காட்சி எம்மைக் கண்ணீர் மல்கச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் வழிபாடு என்ற பெயரில் வடமொழி ஆதிக்கம் செலுத்துகிறது. இசை என்ற பெயரில் தெலுங்கு தலை தூக்கியுள்ளது. தேசிய மொழி என்ற பெயரில் இந்தி திணிக்கப்படுகிறது. அனைத்துலக மொழி என்ற நிலையில் ஆங்கிலத்திற்கு அடிமையாகின்ற போக்கு நிலவுகிறது. அந்நிலையில் எங்கே தமிழ் என்ற கேள்வி எழுகிறது. ஈழத்திலும் இதே நிலை நிலவுகிறது. தேசிய மொழி என்ற நிலையில் தமிழகத்தில் இந்தி திணிக்கப்படுகிறது, ஈழத்தில் தேசிய மொழி என்ற நிலையில் சிங்களம் திணிக்கப்படுகின்றது. ஆனால் அனைத்து நிலையிலும் தமிழகத்தமிழனும், ஈழத்தமிழனும் அடிமையாகத் தான் இருக்கிறான்.

## தமிழனின் தாயகம் பறிபோகின்றது:

எனினும் இன்றைய நிலையில் ஈழத்தமிழனை வாட்டி வதைப்பது மொழியை மிஞ்சுகின்ற நிலையில் தமிழனின் தாயகம் திட்டமிட்டு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசுகளினாலும் அழிகப்பட்டு வருகிறது. ஆனால் அண்மையில் தமிழ் மண் பறிக்கப்படுகின்ற தன்மை நிமிடத்துக்கு நிமிடம் நடக்கின்றது. 'நித்தமும் தவம் செய்யும் குமரி எல்லை வடமாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு' என்று பாரதி பாடிய நி லையிலும் வடமாலவன் குன்றம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது. அதாவது கோடிக்கணக்கில் வருவாய் பெற்றுத் தரும் திருப்பதி இப்போது எம்கையில் இல்லை. நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை எம்மிடமிருந்து பறிக்கப்படும் ஆபத்து அன்று நிலவியது. குமரியோ எமக்குத் தொல்லை, நெல்லையே எமக்கு எல்லை என்று கூறி திருநெல்வேலியை மட்டும் எல்லையாகக் கொண்டு சோம்பேறித் தமிழர் சிலர் நிறைவடைய எண்ணியதுண்டு. ஆனால் நற்றானியலும், நேசமணியும், குஞ்சிநாடார் போன்றோர் போரிட்டதன் விளைவு தென்குமரி இன்னும் எங்கள் கையில் உண்டு. விழிப்போடு இல்லாவிடின் குமரி பறிபோகும் ஆபத்து தொடரும். வடமாலவன் குன்றத்தைக் காப்பாற்ற சிலம்புச்செல்வர் மா.பொ.சி. நடாத்திய போராட்டத்தை நாம் நன்றியுணர்வோடு நினைவு கொள்வோமாக. எனினும் மக்கள் ஆதரவற்ற நிலையில் வடமாலவன் குன்றத்தை இழந்து விட்டோம், திருத்தணியோடு நிறைவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஈழத்தைப் பொறுத்த வரையில் அம்பாறையின் அபகரிப்போடு தொடங்கி, நித்திலம் கொளிக்கும் கோணமாமலைக்கும் கொடுமைகள் சூழ கோணேசன் கோ யிலும் எம்மிடமிருந்து பறிபோகின்ற பேரின்னல் எம்மைத் தொடருகிறது. கோணேசர் கோயிலில் 'கோணேசா அருள்னேசா' என்ற குரலோடு 'கோணமலை காணாத கண்ணென்ன கண்ணே கும்பிட்டு இல்லாத கையென்ன கையே' என்ற குரலுக்குப் பதிலாக 'புத்தம் சரணம் கச்சாமி தம்மம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி தமிழன் மரணம் கச்சாமி' என்ற வெறிச்கூச்சல் சிங்கள கும்பலால் பாடப்படுகிறது. சித்தார்த்தன் சிலை எங்கும் எழுப்பப்படுகிறது. சிங்கக் கொடியும் எங்கும் பறக்கிறது. சித்தார்த்தனுக்கும் சிங்கக் கொடிக்கும் என்ன உறவோ நாமறியோம். உலகின் தலை சிறந்த இயற்கைத் துறைமுகம் எம்மிடம் தொடர்ந்து இருக்குமா என்ற கேள்வி எம்மை எதிர்நோக்கியுள்ளது. மூன்று போக விளைச்சல் உள்ள பூமியை நாம் இழக்கப் போகிறோமா என்ற கேள்வி எம்மை வாட்டி வதைக்கிறது. கந்தளாய், அல்லை, முதலிக்குளம் போன்ற நீர்ப்பாசனக் குளங்கள் எம்மிடம் இருந்து ஏற்கனவே பறிக்கப்பட்டுள்ளன. கிண்ணியா வெந்நீரூற்றின் ஆட்சி அதிகாரத்தை சிங்கள அரசு பறித்துள்ளது. திருமலையில் உள்ள கனிமப் படிவங்களும் எம்மிடமிருந்து பறிக்கப்படுகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக வடக்குக் கிழக்கை இணைக்கும் இணைப்புப் பாலம் திருகோணமலை. அந்த இணைப்புப் பாலம் துண்டிக்கப்படின் தமிழர் தாயகம் முற்றாகத் துண்டிக்கப்படும். சுருங்கக் கூறின் திருமலை இப்போது எரிமலையாக உருவெடுக்கின்றது.

## மீன்பாடும் தேன்நாட்டை மீட்போமா?

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பும் எம்மிடம் இருந்து பறிபோய்கொண்டிருக்கின்றது. முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகள் பிறந்த மட்டக்களப்புக் காரைதீவிற்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது. மட்டுநகர் வாவி புகழ் பாடும் எமது அரசவைக் கவிஞர் காசி ஆனந்தன் பிறந்த மண் மட்டக்களப்பு என்பதை நாம் மறவாது இருப்போமாக.

## கேடுகள் நீக்கும் கேதீஸ்வரனுக்கும் கேடுகள் சூழ்கிறது:

இந்த நிலம் பறிபோகிற தன்மை தொடர்வதன் விளைவு கேடுகள் நீக்கும் கேதீஸ்வரனுக்கும் கேடுகள் சூழ்ந்துள்ளன. புதை பொருள் ஆய்வு என்ற பெயரில் தமிழர் வரலாறு புதைக்கப்படுகிறது. மாதோட்ட நந்நகரை இழக்கும் நிலைக்கு ஆளாகி உள்ளோம். மடுமாதாவின் எதிர்காலமும் ஏக்கம் நிறைந்ததாக விளங்குகிறது. இன்று தமிழனுக்கு வருகின்ற ஆபத்து தமிழன் வணங்குகின்ற தெய்வங்களுக்கும் ஆபத்தாக உருவாகியுள்ளது. கதிர்காமக் கந்தன் இப்போது கத்துறகம தெய்வோ ஆக மாற்றப்பட்டுள்ளான். முனீஸ்வரம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால் போர் எம்மை முடித்துக்கட்ட எடுக்கப்பட்ட முயற்சி:

பறிபோகும் கதை தொடர முல்லைத்தீவிலும் முல்லைத்தீவிற்கு வளமூட்டும் மணலாறு எலியோயாவாக சிங்களத்தில் மாற்றப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் வெறிகொண்ட சிங்கள அரசு ஏறக்குறைய இருபது நாடுகளின் துணையோடு ஈழத்தமிழன் வரலாற்றினை முடித்துக்கட்ட - முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முனைந்துள்ளது. இயற்கைவளம் உள்ள முல்லைத்தீவும் வணங்கா வன்னி மண்ணும் இப்போது சிங்களவர் கையில் உள்ளது. சீனனும், இந்தியனும் சிங்களவனுக்குப் பக்க பலமாகத் தமிழரை அழிப்பதில் பேருவகையோடு செயற்படுகின்றனர். சிங்கள இனவெறிக்கு எல்லையே இல்லை எனக் கூறும் அளவுக்கு முருகண்டிப் பிள்ளையாரையும் முற்றுகையிட்டு சிங்கள இராணுவமுகாம்கள் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

## தமிழர் பண்பாட்டுத் தலைநகர் யாழ்ப்பாணமும் பறிபோகும் நிலை:

முருகண்டியில் வெறியாட்டம் ஆடிய சிங்கள அரசு தமிழனின் பண்பாட்டுத் தலைநகரமாக விளங்குகின்ற யாழ்ப்பாணத்தைத் தம் கைவசமாக்க முயற்சிகள் பலவற்றில் முனைந்துள்ளது. நயினாதீவில் புத்தகோயில் வழிபாட்டுக்கு வந்துள்ளோம் என்று கூறுகின்ற சிங்கள இனம் நயினை அம்மனையும் விரைவில் அப்புறப்படுத்தினால் அதில் வியப்பில்லை. சங்கமித்தை எப்போது வந்தாள் என்பது எமக்குத் தெரியாது ஆனால் அவள் வந்தாள் என்று கூறி மாதகலில் சங்கமித்தைக்குச் சிலை எழுப்பியுள்ளனர். அங்கு சிங்களவரின் எண்ணிக்கை பெருகியுள்ளது. தமிழராண்ட கந்தரோடைப் பகுதியையும் தமதாக்க வரலாறு திரிக்கப்படுகிறது. மணிமுடிதாங்கிய மன்னர் முடியோடு, கொடியோடு, சீரோடு, சிறப்போடும் ஆண்ட தலைநகரம் நல்லூர். அங்குள்ள நல்லூர் முருகன் கோயிலில் செருப்புகளைத் தலையில் தாங்கிக் கொண்டு சிங்கள ஆடவரும், சிங்களப் பெண்களும் வலம் வருகின்றனர். திலீபனின் சிலை சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. கிட்டுவின் பூங்காவும் சிதைக்கப்பட்டுள்ளது. நல்லூர்க் கோயிலுக்கு அருகிலுள்ள நாவலர் மண்டபத்துக்கு அடுத்து என்ன நடக்குமோ என்பது ஒரு கேள்வியாக விளங்குகிறது. 'என்னை எனக்கு அறிவித்த என்குருநாதன் பித்தனென்று பிறர் பேசும் பெருமானாகிய செல்லப்பர' நல்லூர் தேரடியில் தான் வாழ்ந்தார் என்று கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் பாடுகிறார். நல்லூர்த் தேரடிக்கு தீங்கு ஏற்படாது என்று எவரும் உத்தரவாதம் தரமுடியாது.

## தீக்கிரையான யாழ் நூலகம் எந்நிலைக்கு ஆளாகுமோ?

தென்னாசியாவில் தலைசிறந்த நூலகம் என்று யாழ்ப்பாண நூலகம் வர்ணிக்கப்படுவதுண்டு. 1981இல் நூலகம் எரிக்கப்பட்டது. அண்மையில் வெறிகொண்ட சிங்களக் கும்பல் அடாத்தாக இந்நூலகத்துள் புகுந்து நூல்களை அங்கு இங்காகத் தூக்கியெறிந்துள்ளனர். தந்தை செல்வாவின் சிலையில் ஒருபகுதி நாசமாக்கப்பட்டுள்ளது. வெறியாட்டம் தொடர யாழ்ப்பாணத் தொடர்வண்டி நிலையத்தில் புகுந்து அப்பகுதி தமக்கே உரியது என்று உரிமை கொண்டாடத் தொடங்கியுள்ளது சிங்கள இனம். சிங்கள அமைச்சர்கள் அங்கு வருகைதந்து இம்மக்களுக்கு மலசலகூடம் கட்டிக்கொடுத்ததோடு அங்குள்ள காணிகளையும், அங்குள்ள வீடுகளையும் தாரைவார்த்துக் கொடுக்க வேண்டும் என்று யாழ் அரசாங்க முதல்வர் வற்புறுத்தப்படுகிறார் - அச்சுறுத்தப்படுகிறார். இவ்வச்சுறுத்தலை அடுத்து கொழும்புத்துறை மணியம் தோட்டம் சிங்கள மயமாக்கப்பட்டுள்து. பின்பு சடுதியாக இரவோடு இரவாக யாழ் நகரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள நாவற்குழியில் தமிழ் மக்களின் காணிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் வீடுகள் சிலவும் அபகரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய வலோத்கார நிகழ்ச்சி எப்படி நடைபெற்றது என்று வினா எழுப்பப்பட்டபோது நாட்டின் குடியரசுத் தலைவர் - மன்னிக்கவும் கொடியரசின் தலைவர் தனக்கிது நடந்தது தெரியாது என்றும் தன்னைச் சங்கடத்தில் மாட்ட யாரோ செய்த சதி என்றும் கூறிய இவர் எனினும் அங்கு குடியேறிய அம்மக்களை அங்கிருந்து வெளியேற்ற முடியாது என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

## சிங்கள இனத்தின் எண்ணிக்கைப் பெருக்கம் தமிழரின் பிரதிநிதித்துவத்தைப் பாதிப்பது உறுதி:

சிங்கள இனத்தின் எண்ணிக்கைப் பெருக்கமும் இலட்சக் கணக்கில் சிங்கள இராணுவத்தினர் இங்கு நிலைகொள்ளவதும் தமிழர் பண்பாட்டைச் சீரழிப்பது உறுதி. சராசரி ஒரு சிங்கள குடும்பமும், சிங்கள இராணுவக் குடும்பமும் ஐந்து பேரைக் கொண்டிருக்கும். இந்நிலை தொடரின் தமிழரின் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வாக்களிப்பு முறையிலும் மாற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் விளைவு சிங்கள நிர்வாகம் தலையெடுக்கும் சிங்களப் பள்ளிக்கூடங்களும், புத்தகோயில்களும் காளான் முளைத்தது போல் உருவாகும். தென் தமிழ் ஈழத்தை — கிழக்கு மாகாணத்தை விழுங்கி ஏப்பமிட்டுள்ள சிங்கள அரசு வடமாநிலத்தையும் தனதாக்கிக் கொள்ள சதித்திட்டம் தீட்டியுள்ளது. உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிடின் தமிழர் தாயகமும் - தமிழரும் இல்லா நிலையும் உருவாகும்.

## தமிழ் விதவைகளை விலைமகளீர் ஆக்கச் சதி:

தமிழீழத்தில் தமிழ் விதவைகளின் எண்ணிக்கை 89 ஆயிரத்தைத் தாண்டி உள்ளது என்று மீள்வாழ்வுக் குடியேற்ற அமைச்சரே கூறியுள்ளார். கோடிக்கணக்கில் செலவழித்து சிங்கள இராணுவத்திற்கு வீடுகட்டிக் கொடுக்கும் அரசிடம் இப்பெண்களுக்கு வாழ்வு கொடுக்க பணமில்லை என்றும் கூறியுள்ளார். பொய் சொல்லும் உரிமை அரசுக்கு உண்டெனினும் பொருந்தப் பொய் சொல்லல் வேண்டும். இளம் விதவைகள் உட்பட இளம் பெண்கள் வெறிகொண்ட சிங்கள இராணுவத்தின் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகியுள்ளனர். வெறிகொண்ட இராணுவத்தினால் கருத்தரித்த பெண்கள் கருத்தரித்த குழந்தைகளை தம் பிள்ளைகள் அல்ல, சிங்கள வெறியாட்டத்தின் விளைவு என்று கூறி மருத்துவமனையில் அல்லது தெருவோரங்களில் கைவிட்டுள்ளனர்.

## நிலம்தான் ஒரு இனத்திற்கு நிலையான வாழ்வு

ஒரு இனம் எதனையும் இழக்கலாம். மீண்டும் வாழ்வு பெறலாம். மொழி இழந்த இனம், தொழில் இழந்த இனம், படிக்க முடியாது தத்தளிக்கும் இனம் கூட ஏதோ ஒரு விதத்தில் வாழ முடியும். ஆனால் ஒரு இனம் தன் தாயகத்தை இழந்து விட்டால், அந்த இனத்திற்கு வாழ்வே இல்லை. ஒரு இனம் தன்னைத் தான் உணர்த்துவதற்கு மட்டுமல்ல, தன் உயிர்ப்பாதுகாப்புக்குக் கூட — உயிரோடு உடலொட்டி வாழ்வதற்குக் கூட நிலப்பரப்பு வேண்டும். நாளை எதிர்பாராத நிலையில் மகிந்தாவின் சிந்தனையின் மாற்றம் ஏற்பட்டு தமிழனுக்கு மொழி உரிமை, தொழிலுரிமை, படிப்புரிமை போன்றவற்றை தருவதாக நாம் கற்பனை செய்யினும் அதனால் எதுவித பயனும் நமக்கு ஏற்படப் போவதில்லை. உயிரை இழந்த நிலையில் உலகத்தைப் பெற்று என்ன பயன்? தமிழன் உயிர் உடலோடு ஒட்டியிருக்க, அவனுக்கு நிலப்பாதுகாப்புத் தேவை. இடந்தான் ஒரு இனத்திற்கு நிலையான வாழ்வு கொடுக்கும். எம் மகிந்தாவின் சிந்தனையின் படி தமிழர் ஒரு தேசிய இனம் இல்லை என்கிறார். தமிழருக்குத் தாயகம் இல்லை என்கிறார். தமிழரின் தன்னுரிமை நிலைநாட்டும் உரிமை — சுயநிர்ணயக்கோட்பாட்டை ஏற்க முடியாதென்கிறார். அனைத்தையும் ஒற்றையாட்சி அடிப்படையில் தான் தீர்ப்பேன் என்கிறார். இணைப்பாட்சிக்கு இணைய மறுக்கிறார்.

## புலம் பெயர் தமிழ் மக்கள் ஈழத்தமிழரை எப்படிக் காப்பாற்றுவது?<br>தலைவர் விடுத்த வேண்டுகோள் என்ன?

60 ஆண்டுகளுக்கு மேலாக ஒற்றையாட்சியால் நாம் ஒழித்துக் கட்டப்பட்டு வருகின்றோம். இந்நிலையில் நாம் செய்யத் தக்கது என்ன? நாம் புலம்பி அழுவதினால் ஏதும் பயனுண்டா? ஆகவே அழுகையை விட்டு ஆக்கச் சிந்தனையில் நாம் ஈடுபட வேண்டும். இதற்கு ஈராயிரம் ஆண்டுகளாக உலகெல்லாம் சிதறுண்டு வாழ்ந்த யூத இனம் எமக்கு வழிகாட்டட்டும். வெறிகொண்ட கிட்லர் ஆறு மில்லயன் யூதர்களை எரிவாயு முகாம்களில் சித்திரவதை செய்து சாகடித்ததன் விளைவு யூத இனம் கொதித்தெழுந்தது. யூத இனத்தின் செல்வந்தர்கள் தாம் தேவையற்ற விளம்பரம் எதுவும் செய்யாமல், பலஸ்தீன அரேபியர்களிடமிருந்து வெறும் வனாந்தர பூமிகளைக் கூட பெருந்தொகை கொடுத்து நிலவங்கிகள் ஊடாக நிலங்களைக் கொள்வனவு செய்ததன் விளைவு காலப்போக்கில் இஸ்ரேல் உருவாவதற்கு வழிவகுத்தது. வனாந்தரப் பூமியான இஸ்ரேல் இன்று வளம்மிக்க பூமியாக - ஒரு வல்லரசாக விளங்குகிறது. கடல்நீரைக் குடிப்பதற்குரிய நன்னீராக்கியுள்ளது. பொலித்தீன் பைகளில் காய்கறிகளை உற்பத்தி செய்கிறது. இஸ்ரேலுடைய எல்லைப் பரப்பு ஈழத்தமிழ் மக்களுடைய எல்லைப்பரப்பை ஏறக்குறைய ஒத்தது. இஸ்ரேலில் வாழுகின்ற யூதர்களின் எண்ணிக்கை

அமெரிக்காவில் வாழுகின்ற யூதர்களின் எண்ணிக்கையை விட மிகக் குறைவு. ஆனால் இஸ்ரேல் ஒரு தனி நாடாக இருப்பதனால் அமெரிக்காவில் வாழுகின்ற யூதர்கள் நிதித்துறையிலும், வெளியுறவுத்துறையிலும், ஊடகத்துறையிலும் அரசோச்சிய அமெரிக்காவின் சிந்தனையையும், செயற்பாட்டையும் கட்டி ஆழ்கிறார்கள். ஒரு இனம் வாழ வேண்டின், அதனுடைய எண்ணிக்கை முக்கியமல்ல, அதனுடைய எல்லைப் பரப்பு முக்கியமல்ல, எண்ணத்தில் ஏற்றம் பெற்றுவிட்டால், தனக்கென ஒரு நாட்டை அமைத்து விட்டால் அந்த இனம் வாழ்ந்தே தீரும். இஸ்ரேல் இதற்கு எடுத்துக் காட்டு. சிங்கப்பூரைச் சிங்கார பூமி என்று கூறுகிறோம். எப்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரைச் சிந்தையில் கொண்டு உச்சரிக்கின்றோம். சிங்கப்பூர் யாழ்ப்பாணத்தை விட சிறியது. ஆனால் அது இன்று ஓர் வல்லரசாக விளங்குகின்றது. ஐ.நா.மன்றத்தில் இன்று 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் ஏறக்குறை 25 நாடுகள் சுண்டைக்காய் அளவு நாடுகள். ஆனால் அவை சுதந்திரம் பெற்று விளங்குவதனால் அவர்களை எவரும் புறக்கணிக்க முடியாத அளவுக்குத் தாம் ஆட்சி செலுத்துகின்றனர். சிலவேளைகளில் உலக வல்லரசுகளோடும் மோதுகின்றனர்.

## யூதர் போல் நில வைப்பகத்தை உருவாக்கி ஈழம் காப்போம்!

இவற்றையெல்லாம் நினைவு கொண்டு நம்பிக்கையை இழக்காத நிலையில் நம்பிக்கை மலைகளை அசைக்கும் என்ற விவிலியக் கூற்றில் நம்பிக்கை வைத்து தோல்வி நிலையைப் போக்கி, சோர்வகற்றி, புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் தங்களிடையே நிலவுகின்ற மாறுபாட்டை, வேறுபாட்டை, கூறுபாட்டை நீக்கி ஒன்றுபட்டு குரலெழுப்புவதோடு யூதர்கள் போல் நிலவைப்பகங்களை - நிலவங்கிகளை உருவாக்கி, தமிழீழத்தில் பறிபோக இருக்கும் எம் நிலங்களை எம்வசமாக்கிக் கொள்ள வேண்டும். 'காலம் கனியும் என்று காத்திராது காலத்தை கனிய வைக்கின்ற முறையில் விரைந்து செயற்படுவோமாயின் இருளுக்குப் பின் விடிவு ஏற்படும் என்பதற்கமைய எம்மைச் சூழ்ந்த இருளினைப் போக்கி, எமக்கு விடிவினைக் காண விடுதலையை நிலைநாட்ட நாம் ஒன்றுபட்டு செயற்படுவோமாக.' புலம் பெயர் தமிழ் மக்களிடம் இதனைத் தான் எம் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 2008 மாவீரர் உரையில் எடுத்துரைத்து வலியுறுத்தி உள்ளதை நாம் நினைவு கொள்வோமாக.

எங்கள் தாகம் தமிழீழத் தாயகம்.

❖❖❖❖❖




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant




### *We Will*

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

**VERICO TMP**

## Siva Ratnasingam

*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

***2005,2006,2007,2008 Diamond Award Winner***

**416.520.1214**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா வாழ் ஈழத்தமிழர்களும் கலை, கலாச்சாரம் சார்ந்த அரச நன்கொடையும்



செல்வநாயகி. ஸ்ரீதாஸ்

'கனடா வாழ் தமிழரிடையே பரஸ்பரம் ஒற்றுமையை வளர்ப்பதோடு அவர்கள் கனடிய அரசியல், பொருளாதாரத்தில் மேம்பட்ட பங்கினை வகிக்கவும், தமிழரது பாரம்பரிய மொழி, இன, கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்தல்.' (இணைய யாப்பு, பிரிவு 6.4)

இது கனடாத் தமிழர் இணையத்தின் நோக்கங்களுள் ஒன்று. கனடாத் தமிழர் இணையத்தின் இப் பிரிவின் ஒரு பகுதியாகிய 'தமிழரது பாரம்பரிய மொழி, இன, கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்தல்' என்னும் பகுதியே கட்டுரைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம்.

கனடாவில் மத்திய அரசு, மாகாண அரசு, மாநகர அரசு என்னும் மூன்று அரசியல் மட்டங்களிலும் அவர்களது வரவு செலவுத் திட்டத்தில் மிகப் பெரும் தொகைப் பணம் கலை, கலாச்சாரத்தின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படுகிறது என்ற விடயம் நாம் அறிந்ததே. கனடா ஒரு பல்லின, பல்கலாச்சார நாடு. பல்கலாச்சாரச் செறிவு, கனடா போன்ற நாடுகளின் தனித்தன்மையும் பலமும் ஆகும். பல்லின மக்களினதும் பல்வேறுபட்ட பாரம்பரிய கலை, கலாச்சாரத்தின் சங்கமத்தால் கனடா, கலை, கலாச்சாரத் துறையில் உலக அரங்கில் மிகச் சிறந்த நாடு என்னும் உன்னத நிலையை அடையும் என்பது கலை கலாச்சாரத் துறையின் எதிர்பார்ப்பு என்பது வரவு செலவுத் திட்டத்தில் கலைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தில் பிரதிபலிக்கிறது. கலையையும் கலைசார்ந்த செயற்பாடுகளையும் தமது நோக்கமாகவும் வாழ்வாதாரமாகவும் கொண்ட கலைக் கல்லூரிகளும் கலாச்சார நிறுவனங்களும் தனிநபர்களும் அரசின் இக் கொள்கையால் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள்.

இவ்வாறு அரசு, கலைக்காகச் செலவு செய்யும் பணத்தின் எத்தனை விழுக்காட்டைக் கனடாவை இன்று தமது நிரந்தர வதிவிடமாக அமைத்துக் கொண்டுள்ள ஈழத் தமிழர் தமதாக்கிக் கொண்டுள்ளார்கள் அல்லது தமது கலை கலாச்சார வளர்ச்சிக்குப் பயன் படுத்தியுள்ளார்கள்? மிக மிகச் சிறிய விகிதமானவர்களே இது பற்றிய அறிவு உள்ளவர்களாக இருக்கிறார்கள். அறிந்தவர்கள் கூட அது தமக்கு எட்டாப்பழம் என்ற நினைப்பில் அசட்டையாக இருந்து விடுகிறார்கள் போலும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் பிள்ளைகள் திசை தவறிப் போகாது உரிய வழியில் அவர்களை வழிநடத்திச் செல்வதற்குக் கலை ஒரு சிறந்த சாதனமாகப் பயன்படுத்தப் படுகிறது என்பது உண்மை. குழந்தைகள், தமிழ், நடன, இசை வகுப்புக்களுக்குச் செல்லும் போது தம்மொத்த தமிழ் மாணவர்களுடன் பேசவும் பழகவும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. தமிழ் மொழி பாவனை குறைந்த வீடுகளில் வளரும் குழந்தைகள் கூட தமிழையும் தமிழ்க் கலைகளையும் விரும்பிக் கற்பதைக் கண் கூடாகக் காண்கிறோம். எமது பாரம்பரிய கலைகளிலுள்ள செறிவு அவர்களைத் திசை தப்பிப் போகாமல் இருப்பதற்கு ஒரு வடிகாலாக அமைகிறது.

பிள்ளைகளின் கலை வளர்ச்சிக்காகப் பெற்றார் செலவிடும் பணம் அவர்கள் தமது பாரம்பரியத்தையும் அத்துடன் கூடிய தனித்தன்மையையும் தொலைத்து விடாது பேணுவதற்காக இடப்படும் மூலதனமே. நான் இங்கு குறிப்பிடுவது இத்தகைய மூலதனத்தை அல்ல. தமது சொந்தச் செலவில் கலைகளை ஆர்வமுடன் கற்கும் மாணவர்கள் ஈழத்தமிழர் சமூகத்தின் அரிய சொத்துக்கள். இவ்வாறான இளங் கலைஞர்களைக் கனடா பெருமளவில் உருவாக்கி வருவதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். கலைஞர்கள் உருவாவது நாணயத்தின் ஒருபக்கம் என்றால் அக் கலைஞர்களுக்கு உரிய வாய்ப்புக்களைக் கொடுப்பதன் மூலம் அவர்களை உலக அரங்கிற்கு உயர்த்த வேண்டிய பாரிய பொறுப்பு நாணயத்தின் மறுபக்கம். இன்று வசதியும் வாய்ப்பும் உள்ள பெற்றார்களின் குழந்தைகளுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் ஏனையவர்களுக்குக் கிடைத்து விடுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழச் சமூகத்தில் இருக்கும் முன்னணிக் கலைஞர்களும் கலைக் கல்லூரிகளும் தாம் இந்த அரச நன்கொடை பெற்று இளைஞர்களுக்கு அவர்கள் திறைமைகளை வெளிக் கொணர்வதற்கு வாய்ப்புக்களை வழங்க முன்வரவேண்டும். நாம் வெறுமனே சிவனே என்று இருந்தால் எமக்கு அரச நன்கொடை என்றுமே கிடைக்கப் போவதில்லை. அதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். கலைச் சேவையில் நாம் உயர்ந்த நிலையிலே தான் இருக்கிறோம். ஆனால் அரச நன்கொடை பெறுவதற்கான தகைமைகள், வரைமுறைகள் என்பன என்ன, கடப்பாடுகள் எவை என்பதை ஆய்ந்தறிந்து தகமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இம் முயற்சியை இன்று ஆரம்பித்தால் என்றோ ஒரு நாள், அது அடுத்த ஆண்டாக இருக்கலாம், அல்லது நான்காம் ஆண்டாகக் கூட இருக்கலாம். ஆனால் நிச்சயம் வெற்றி கைகூடும்.

இது சம்பந்தமான விடயங்கள் அனைத்தும் இணையத் தளங்களில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் துறைசார்ந்த அலுவலர்களது தொலைபேசி இலக்கங்களையும் அவர்களது மின் அஞ்சல் முகவரிகளையும் தேவைப்பட்ட வேறும் பல முக்கியமான தகவல்களையும் இணையத்தளங்கள் தாங்கி வருகின்றன. நன்கொடை பெறுவது சம்பந்தமான சகல ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இசை, நடனம், நாடகம், எழுத்து, ஒளிக் கலை, ஊடகவியற் கலை (Visual Arts, Media Arts) முதலி ய பல்வேறுபட்ட கலைத் துறைகளுக்கும் சமூகம் சார் நிகழ்வுகளுக்கும் தகுதியின் அடிப்படையில் நன்கொடை வழங்கப் படுகின்றது. சம்பந்தப்பட்ட தாபனங்களின் இணையத்தள முகவரிகள் வருமாறு:

கனடா கவுன்சில் **(Canada Council):** www.canadacouncil.ca

ஒன்டாரியோ ஆர்ட்ஸ் கவுன்சில் **(Ontario Arts Council):** www.arts.on.ca

ரொறோண்டோ ஆர்ட்ஸ் கவுன்சில் **(Toronto Arts Council):** www.torontoartscouncil.org

புலம் பெயர் தமிழர்களிடையே கலை, கலாச்சாரம் சிறப்புற வளர்க்கப்படுகிறது. மூலை முடுக்குகளெல்லாம் நடன ஆசிரியர்களுக்குக் குறைவில்லை. வாய்ப்பாட்டும், வாத்திய இசையும் இசை விற்பன்னர்களால் சிறப்புற வளர்க்கப்பட்டு வருகிறன. இத்தனைக்கும் மேலாக தமிழ் நாட்டிலேயே தமிழுக்கும் இசைக்கும் பெயர் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது கிளையைக் கனடாவில் நிறுவித் தமிழையும் இசை (வாத்தியம், வாய்ப்பாட்டு), நடனம் முதலிய பாரம்பரிய கலைகளையும் சிறப்புற வளர்க்கத் துணை புரிந்து வருகிறது. பெற்றாரும் தம் பங்கிற்குப் பிள்ளைகளின் கலை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்து வருகிறார்கள். தமிழையும் கலை கலாச்சாரத்தையும் வளர்க்கத் தமிழ்ப் பெற்றார்கள் எடுக்கும் முயர்ச்சி பாராட்டுதற்குரியது. உலகிலேயே மிகப் பெரிய புலம் பெயர் ஈழத்தமிழர் சமூகத்தைக் கொண்டுள்ள ரொறோண்டோ நகரில் மேற்கூறப்பட்ட சாதனைகள் அனைத்தும் யதார்த்தமே. ஆனால் அரச மானியத்தைப் பெறுவதில் மட்டும் நாம் ஏன் உற்சாகம் காட்டவில்லை?
மேற் கூறப்பட்ட அரச தாபனங்களுள் ஒன்றான 'ரொறோண்டோ ஆர்ட்ஸ் கவுன்சில்' தனது நோக்கத்தை கீழ்க் கண்டவாறு விளக்குகிறது:

"Toronto Arts Council provides grants to outstanding artists and arts organizations that contribute to the cultural life of the City of Toronto. TAC is committed to artistic excellence, innovation, and accessibility, and supports a wide spectrum of artistic endeavour and a range of activity that makes the City of Toronto one of the leading cultural centres in Canada. Through its support, TAC cultivates a richer engagement between artists and audiences and reflects the City of Toronto through the diversity of artists, arts communities and audiences that it serves."

## அரச நன்கொடை சம்பந்தமாக எமது நிலைப்பாடு தான் என்ன?

- தரமான கலைஞர்களைப் பெற்றிருந்தும் எமக்கு உரித்தான பங்கை நாம் வேறு சமூகத்துடன் சேர்ந்து உழைப்பதன் மூலம் அவர்களுக்காக்கிக் கொண்டிருக்கிறோமா?
- எமது தரத்தை நாம் குறைவாக எடை போடுகிறோமா?
- கலை கலைக்காகவே என்ற நோக்கத்திலிருந்து விலகிவிட்டோமா?
- நன்கொடை வழங்கும் தாபனங்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப நடந்து கொள்வதில் எமக்கு ஏதாவது பிரச்சனைகள் இருக்கின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான கலை, அதை முறையாக எடுத்துவரக்கூடிய காரியசித்தி, அமைப்புக்களை ஒழுங்காக நடாத்தும் நிருவாகத் திறமை, கலைஞர்களின் நேரடிப் பங்கு, நன்கொடைப் பணத்தில் கலைஞர்களுக்கு நேரடியாகக் கிட்டும் தொகை போன்ற பல நடைமுறைக் காரியசித்திக்கான விடயங்கள் அவதானிக்கப் படுகின்றன. நன்கொடை தீர்மானிக்கப்படும் நடுவர்களால் (Jury members) இவை மிக நுணுக்கமாக அவதானிக்கப்படுகின்றன. துறை சார் அலுவலர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் பிரச்சனைகள் இருப்பின் அவற்றிற்கு தீர்வு காணக் கூடியதாக இருக்கும்.

புலம் பெயர் நாடுகளில் எமது தனித்துவத்தைத் தக்க வைத்துக் கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டும் நாம் இவ்விடயத்தில் இவ்வாறு அக்கறைக் குறைவாக இருப்பது விளங்கிக் கொள்ளக் கூடியதாக இல்லை. உலக அரங்கில் எம்மை உயர்த்திக் கொள்வதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்படும் இச் சந்தர்ப்பத்தில் எமது கலாச்சாரத்தை, முன்னிலைப் படுத்த எடுக்கப்படும் எம் முயற்சியும் அவசியமல்லவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய பார்மசி

## Arogya PHARMACY

### உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்

- ⇒ நல்ல அனுபவம் வாய்ந்த மருந்தாளர்
- ⇒ மருந்துகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் & விபரங்கள்.
- ⇒ **தமிழ் மருந்தாளரின் தரமான, நிறைவான சேவை**
- ⇒ **FREE PRESCRIPTION DELIVERY**
- ⇒ சலரோகம்(Diabetes), இரத்த அழுத்தம் (Blood Pressure) பற்றிய தமிழ் கையேடுகள்
- ⇒ தேவையாயின் உங்கள் வீடு வந்து சேவை (விபரங்களுக்கு அழையுங்கள்)
- ⇒ NO $ 2.00 Co-Pay— விசேட விலைகள்

**மனமார்ந்த சேவை! நிறைவான சேவை!**

## Karthik Venkatachalam

*Pharmacist / Owner*



5200 Finch Avenue East, Unit, 111
Toronto, Ontario M1S 4Z4
Tel : 416-840-0007
Fax : 416-840-0008
arogyapharmacy@remedysrx.ca
www.remedys.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Poonakari Social Development Association Canada**

*(Estd on Augt 24, 1997 & Incorporated as a Non- Profitable Organization on April 08, 2002)*

பூநகரி சமூக அபிவிருத்திச் சங்கம் கனடா

www.poonakari.com

51 Bedale Crescent, Markham ON, L3R 3N8, Canada.

இனிய தமிழ் மக்களே! கல்வியும், கடின உழைப்பும், கலாச்சாரப் பின்னணியும் கொண்டு வாழ்ந்த எம் தமிழ் மக்கள் இன்று எல்லாம் இழந்து ஏதிலியாய் அங்கு வாடுகிறார்கள்.இங்கே நாம் கனடிய பொருளாதாரத்தில் கலந்து நம் வாழ்வாதாரத்தை பாதுகாக்கின்றோம். ஆனால், கடந்தகாலங்களில் தமிழர் புறக்கணிப்பு , அடக்குமுறை ஆட்சி, முள்ளிவாய்க்காலில் முடிந்த போர் என்பவற்றால் எமது ஈழத்தமிழ் உறவுகளின் உயிர்கள் ஆயிரக்கணக்கில் பறிக்கப்பட்டன, புதைக்கப்பட்டன, பொருளாதாரம் சிதைக்கப்பட்டது.

எமது ஊர் சங்கங்கள் தம்மால் இயன்ற அளவு தமது பிராந்திய மக்களுக்கு கல்வி, குடிநீர், சிறுவேலைவாய்ப்பு, இருப்பிடவசதி என்பனவற்றை சிறிய அளவில் செய்துகொண்டு இருக்கின்றன. இப்படியான சேவைகளை எமது பூநகரி சமூக அபிவிருத்திச் சங்கமும் செய்துகொண்டிருக்கிறது. கனடா தமிழர் இணையம் எமது ஈழத்தமிழ் மக்களின் துயர் துடைக்க உங்களிடம் "அன்புக்கரங்களை" நீட்டி உங்களின் ஆதரவை வேண்டி நிற்கிறார்கள். இந்தப் பெரு முயற்சி வெற்றியடைய, பெருமனம் படைத்த மக்கள் பெருநிதி வாரி வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம். நாமும் இந் நிகழ்வில் பங்குபற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.

**தலைவர்: இராஜா நடராஜா**

**செயலாளர்: நிற்கு மயில்வாகனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United People Association of Usan in Canada

உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம் -கனடா

01/12/2010

# வாழ்த்துகிறோம்

உலகபந்தின் ஒவ்வொரு மூலையிலும் தமிழினம் இன்று தனது வேரை ஆழ ஊன்றி வரும் வேளையில். எங்கள் நாடு எங்கள் மதம் எங்கள் இனம் என்று எல்லாவற்றுக்கும் மேலாக. எங்கள் மொழி தமிழ்
என்ற ஒரே குடையின் கீழ் அணிதிரண்டு விழுது விடும் காலம் இது. அவசர உலகமும் வேகமான அறிவியல் ஓட்டமும்.போட்டி போடும் பொருளாதாரத்திட்கும் முகம் கொடுத்து பல சவால்களுக்கும் மத்தியில் தமிழைஉலகறியசெய்யும்.இன்னோர் முயற்சியாக கனடா தமிழர் இணைம் நடாத்தும் "அன்புக் கரங்கள்" கலை விழா இன்னொரு படிக்கல்லாக அமையும் என நம்புகிறோம்.

முக்கலை சேர்ந்த தமிழ் கனடாவில்
புதுயிர்பேற்றேளும்இந்த"அன்புக்கரங்கள்" நிகழ்வு
மிகவும் சிறப்புற அமைய உசன் முருகபெருமான் அருள் புரியவேண்டுவதுடன். கனடா உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம் தனது
ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்ளகிறது .
இந்நிகழ்வு மாபெரும் வெற்றியடைய அனைவரின் ஒத்துழைப்பையும் கேட்டு நிற்கிறோம்.

நன்றியுடன் .

**உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம்-கனடா**

கனகசபை நகுலன்
தலைவர்

சுப்பிரமணியம் பாஸ்கரன்
செயலாளர்

25 Royal Crown Rd, Markham, ON L6E 1S3, Canada. Tel:647-547-8817 e-mail:editor@usan.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JRS College

"Committed to Provide Quality Training"



## DIPLOMA PROGRAMS

- Accounting and Payroll Administration
- Health Office Administrator
- Computerized Accounting
- Office Administration

## Certificate Courses

-Simply Accounting
-Ms Office
-Business Communication
-QuickBook
-Food Handling
-Accpac
-Bank Teller
-Cashier
-Payroll

**We offer Free Computer Basic Class Every Month.**

Some Courses are not available in Etobicoke Campus

(Registered and Approved as a Private Career College under the Private Career Colleges Act 2005.)


**Scarborough Campus**
**(Midland & Finch)**
**330-4168 Finch Avenue East**
**Scarborough,ON M1S 5H6**
**416-292-2455**

**Etobicoke Campus**
**(Kipling & Dundas)**
**300-5359 Dundas St West**
**Etobicoke,ON M9B 1B1**
**416-207-9975**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கனடாத் தமிழர் இணையம் நடத்தும்

# 'அன்புக்கரங்கள்'
# 2010

சிறப்பாக நிறைவேற

AVM MAX 2000 CHARTER SERVICES INC.

விமலன் கைலாசபிள்ளை

5215 Finch Ave East #250, Scarborough, ON M1S 0C2

Tel: 416 609 2542

தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

AVM

Max2000
Charter Services Inc.

**Vimalan Kailasapillai**

**CEO**






Phone: 416 609 2542
Fax: 416 609 2551
Cell: 647 201 2542
E-mail:
vimal_max_2000@hotmail.com
Web : www.avmmax2000.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SECURE YOUR CHILD'S FUTURE WITH ONE OF CANADA'S MOST FLEXIBLE AND INNOVATIVE REGISTERED EDUCATION SAVINGS PLANS**

**CHILDREN'S EDUCATION FUNDS INC.**

NURTURE THE DREAM

Offers


A VERY DIFFERENT GROUP OF RESPs

# *Many Good Reasons to Get Started with US !!*

- ✓ SAFE, SECURE AND ONE OF THE MOST FLEXIBLE PLANS
- ✓ HIGHEST SCHOLARSHIPS PAID 14 YEARS IN A ROW
- ✓ GET AIR MILES® REWARD MILES WITH CET
- ✓ ASK US ABOUT THE CANADA LEARNING BOND AND ENHANCED CESG

## FOR MORE INFORMATION IN DETAIL & APPOINTMENT

உங்கள் பிள்ளைச் செல்வங்களின்
மேற்கல்விக்கான நிதியம் தொடர்பான
சிறந்த சேவைகளையும்
ஆலோசனைகளையும் பெற
தொடர்பு கொள்ளுங்கள்



**CAREER OPPORTUNITIES ALSO AVAILABLE**

**SIVA KANAPATHYPILLAI**
*Branch Manager*
*Dealing Representative*

**OFF: 416.438.0660**

**CELL: 416.899.6044 | RES: 905.472.1139 | Fax: 416.438.8532**

**s.kanapathypillai@cefi.ca**

2100 Ellesmere Rd, Unit #307 Scarborough ON. M1H 3B7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Rajah Ram CATERERS

**SPECIALIZED IN SRI LANKAN & INDIAN CUISINE**

தரமான பாகம் | தவறாத நேரம் | தரமே நிரந்தரம்

# Rajah Ram
## Caterer

திருமணமா. பிறந்ததினமா. கல்லூரியின் அல்லது
ஸ்தாபனங்களின் வருடாந்த விழாக்களா.
வேறு வைபவங்களா. எதுவானாலும்
கூறுங்கள் வகை வகையாக செய்திடுவோம்.

**www.rajahram.com**

**Tel: 416-299-5200 Fax: 416-299-5795**

589 Middlefield Road, #20,
Scarborough,
Ontario M1V 4Y6

**Tel: 416-299-5200**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Markham video

*Sales & Rentals*



ஆங்கிலம், தமிழ், மலையாளம்,தெலுங்கு
ஹிந்தி ஆகிய திரைப்படங்கள் மற்றும்
குங்குமம், ஆனந்தவிகடன்,குமுதம்
பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றை
பெற்றுக் கொள்ளவும்




**வீடியோ பிரதிமாற்றம்**

**Pal <> NTSC**
**VHS<> DVD**
**MP3<> CD**
**USB<> CD**
**Any file to Any File**

**7200 Markham Road, Suite #4**


**Markham, ON L3S 3R7**

**Tel : 905.294.4253**

**Fax : 905.294.6461**

**info@markhamvideo.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Baba Banquet Halls

"Where fantasies step into reality"

In the Hospitality Industry since 1986

NEWLY RENOVATED FOR 2011!!




With two beautiful banquet halls and quality customersevice, why search any further...









We also accommodate large event and catering orders in other venues.



Baba Banquet Halls & Catering
3300 McNicoll Avenue (Middlefield and McNicoll)
Contact Mr Baba at: (416) 335-3334
www.bababhalls.com | info@bababhalls.com | Facebook group: Baba Banquet Halls


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் கரங்கள் - 2010

மங்கள நாதஸ்வர இசை-கலைஞர் சித்திரவேலு குழுவினர்

மங்கள விளக்கேற்றல்

கனேடிய தேசியகீதம், தமிழ்த்தாய் வாழ்த்து-ஜானகி காந்தரூபனின் மாணவியர், குலக்க்ஷணா பரணிவாசகம், வைக்ஷ்ணவி சிவகுமாரன், பிரணவி சிவகுமாரன்

அகவணக்கம்

வரவேற்பு நடனம்-நடன ஆசிரியை ராஜநந்தினி லிங்கத்தின் மாணவி தரணி லக்ஷ்மணவாசன்

தலைவர் உரை-திரு. வின். மகாலிங்கம்

கர்நாடக இசை-இசைவேந்தன் மயூரன் தனன்சயன் குழுவினர்

விருந்தினர் உரை-Rob Oliphant, Multi Cultralasim Critic From the office of the of opposition

நடனம்-நடன ஆசிரியை நிவேதா இராமலிங்கத்தின் மாணவிகள்

விருந்தினர் உரை-ராதிகா சிற்சபெய்சன்

தாளலய இசை நடனம்-திருமதி மலர்விழி ஜனகன், 'ஆரியா நடனக்கல்லூரி' மாணவிகள்

பிரதம விருந்தினர் உரை-வைத்தியக் கலாநிதி ஜெராட் பிரான்சிஸ்

நகைச்சுவை நாடகம்-வானொலிக் கலைஞர்களுடன் சுரேஸ்ராஜா குழுவினர்

விருந்தினர் உரை-கலாநிதி. இராம் சிவலிங்கம்

குறத்தி நடனம்-செல்வி யாழினி இராஜகுலசிங்கம்

இடைவேளை

தாள ஜதி தபேலா கச்சேரி-தபேலாக்கலைஞர் ரவி சின்னையாவின் மாணவர்கள்

அங்கத்தவர் உரை-திரு. ம. க. ஈழவேந்தன்

குழு நடனம்-திருமதி அற்புதராணி கிருபராஜ், 'அற்புத நர்த்தனாலய' மாணவிகள்

நன்றி உரை-திருமதி செல்வநாயகி சிறிதாஸ்

சமூக நாடகம் 'முக்கோணம்'-கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் குழுவினர்

நிகழ்ச்சித் தொகுப்பாளர்: தியாகலிங்கம் முருகேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 101 RAJEE AUTO SERVICES

LICENSED TECHNICIANS ON DUTY

INDRAN: Cell: 416-836-3130 / 416-759-2002

73 Howden Rd., Scarborough, On M1R 3C7

உங்கள் சகலவிதமான
வாகன திருத்த வேலைகளுக்கும்
நம்மவர் மத்தியில்
நம்பகரமாக நாடுங்கள்.



உங்கள் திருப்தி
எங்கள் உத்தரவாதம்

அத்துடன் உங்களுக்குத் தேவையான
பாவித்த வாகனங்களை தரமாக வாங்கிக்கொள்ள
மனத்துணிவுடன் வாருங்கள்.

INTER AUTO CENTRE

現代 汽車中心




Cell: 416-836-3130
Tel : 416-321-8805

Indran

4040 Sheppard Ave. E., Scarborough, ON. M1S 1S6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Are you strugling to get Business loan or Mortgage

Office: 416.800.3636
Direct: 416.277.7660
Fax: 416.273.2727
email: suboshan@mail.com
www.mortgagealliancesuboshanthevarajah.com



Suboshan, AMP
Mortgage Consultant

LIC # M08002859

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE




creations creates creatives 416.800.3636


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# RUBY & RUBY

Sarees
Ladies,
Men Items
Gift Items,
And much more

416-264-7833
2843 LAWRENCE AVE EAST
SCARBOROUGH, ON M1P 2S8

* இந்தியாவிலிருந்து நேரடியாக **RUBY** யின் தெரிவில் தருவிக்கப்பட்ட அனைத்து இளமங்கையருக்கான புதிய பசன் சாறி வகைகள்.
* அனைத்து அளவுகளிலுமான 100% கொட்டின் **Silks** பஞ்சாபிவகைகள், லங்காஸ், சிறுவர்களுக்கான குருத்தாஸ், **SareeSuits** இன்னும் பலவகை. இளமங்கையருக்கான குருத்தி **Tops** அத்துடன் **Indonesia, Bankok, Singapore** இலிருந்து தருவிக்கப்பட்ட **New Skits & Blouses.**
* முதியவருக்கான **Housedresses** மிக மலிவு விலைகளில் சாறிகள்,(**Cotton& Siliks**)ஆண்களுக்கான வேட்டி, சாறம், **Shirts,T-Shirts,,Pants** வகைகள்
* அத்துடன் இளமங்கையருக்கான புதிய **Design** களில் **Neckless**,பொட்டு, தோடு, காப்பு, இன்னும் சொல்லிலடங்காப் பொருட்கள்.
* அனைத்தும் என்றும் நியாயமான விலையில் **RUBY** யில் பெற்றுக் கொள்ளலாம்



# ACTIVE BRAIN CENTRE

ABC




*Abacus training for creative minds*

THE INTERNATIONALLY ACCLAIMED WHOLE BRAIN DEVELOPMENT PROGRAM FOR CHILDREN BETWEEN THE AGE GROUP OF 4 - 13 YEARS.

REWARD YOUR CHILD WITH THIS PROGRAM AND MAKE YOUR CHILD A GENIUS

**416-615-2520**
**mail@activebraincenter.com**
WWW.ACTIVEBRAINCENTER.COM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஓம் சக்தி ஜோதிடம் பண்டித் சங்கர்

ஜோதிடம் இறைவனால் பரம்பரை பரம்பரையாக எமது
குடும்பத்டதிற்கு வழங்கப்பட்ட அருங் கொடையாகும்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சங்கர் சாஸ்திரிகள்

மலேசியா,சிங்கப்பூர்,மொரிசியஸ்,சுவிஸ்,நியுசிலாந்து,இலங்கை,அமெரிக்கா,லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார். இவர் கைரேகை,சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை,நாமநட்சத்திரம்,கல்வி,உத்தியோகம்,தொழில்,வியாபாரம்,குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாத்திரம் வதிவிடப்பிரச்சனைகள், வெளிநாட்டு பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஷ்டநஷ்டங்கள், நீதிமன்ற வழக்குகள்,வாகன பொருத்தம் பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஓன்று கூடுதல் இவற்றையெல்லாம் அறிந்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.





## Tel : 647-686-0808

**EMPASSY'S CONVENIENCE & GROCERY (NEAR SAMOSA KING)**
**5200 Finch Ave East, Unit 101-103 Scarborough, ON M1S 4Z3**
**(Middlefield & Finch)**
**Open 7 Days Time 9.00 Am to 8.00 Pm**





# கனடாத் தமிழர் இணையம் நடத்தும்

## அன்புக்கரங்கள்" கலை விழாவிற்கு

**தனது நல்லாதரவைத் தெரிவித்துக் கொள்கின்றார்**

# MANIKANDAN

*Take out & Catering*

*Puriyani,Thali,Masala Dosa, String Hopper , Pittu,Plain Roti, Kothu Roti,Fried Noodles,Fried Rice,Lump Rice, Deviled Shrimp, Chilli Chicken & All Kind of Shorts Eats*





**790 Military Trail, Unit 1A**
**Scarborough ,ON**
**M1E 4P7**

**Siva**
**416-283-1260**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Served Over 20 Years

# NTE AUTO INC.
New Trade Engineering

MS7

## "Fully Licensed Class "A" Mechanics"

**Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars**

Honest & Competent Auto Service
Full Service including A/C. Transmission etc.

No hassle Service
Mechanical, Auto Electrical Repairs
Mechanical Safety Inspection & Certification
Reference upon request

## MS7 QUALITY USED CAR SALES

***Certified, E-test with limited warranty and reasonable price***




**Tel: 905-770-2575**

**346 Newkirk Road, #16, Richmond Hill   Cell: 416-399-6640**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

English Math Sciences French Study Skills Homework

# The Best A's Come From Understanding

**$50 Off First Month's Tuition With This Ad**

Approach the process of learning properly and you wind up creating more than hard-working students with good marks. You build motivated, self-assured, independent thinkers who really understand what they learn. That means better grades...on every test, in every subject, and on every report card.

**Pre-K to Grade 12**

OXFORD LEARNING Since 1984

***Serving Markham and Scarborough***

Oxford Learning Centre
Steeles Ave. East,
(between Kennedy and McCowan)
416-321-1646 and 905-201-8372
markhamsouth@oxfordlearning.com

**Call today, or visit oxfordlearning.com** Oxford Learning Cer





*Higher Standards Agents... Higher Results!*

**Prasath Sathiyanathan**
Sales Representative

**HomeLife/Future**
Realty Inc.,Brokerage
Independently Owned and Operated

HOMELIFE HIGHER STANDARDS

262 Markham Road
Scarborough ON. M1J 3C5

Bus.: (416) 264-0101
**Cell : (647) 296-7932**
Fax : (416) 261-1519
prasath4homelife@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DTS JEWELLERY MART

*We specialize in custom made jewellery for all occasions*

*Exchange offers are welcome.*










**We also buy & sell 24k Gold & Silver**
**World wide Money transfer services**

3301 McNicoll Ave.
Unit 11 & 12
Toronto,ON
Canada. M1V 2V4

Tel:-416-297-0001
Fax:-416-297-9095
Direct:- 416-616-2720
www.dtsjewellerymart.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாத் தமிழர் இணையம்
# யாப்பு

**1. பெயர்:**

இவ் அமைப்பின் பெயர் "கனடாத் தமிழர் இணையம்" என்பதாகும். இந்த யாப்பில் மேல்வரும் பகுதிகளில் "இணையம்" எனக் குறிப்பிடப்படும்.

**2. செயலகம்:**

இணையத்தின் பிரதான செயலகம் ரொறொண்டோ பெரும்பாகத்தில் அமைந்திருக்கும். பிரதான செயலகம் அல்லது அதன் கிளை அலுவலகம் இயங்கும் முகவரியை நிர்வாகசபை தீர்மானிக்கும்.

**3. நோக்கு:**

உலக நாடுகளின் பார்வையில், அந்தந்த நாடுகளில் மக்கள் இயல்பாக அனுபவித்து வரும் சுதந்திரம், பாதுகாப்பு, அமைதி, சம அந்தஸ்துடன் கூடிய கௌரவமான வாழ்க்கைக்கு நேரொத்த வாழ்வை ஈழத் தமிழர் பெற்றுக் கொள்வதில் செயற்படும் அனைத்துப் புலம் பெயர்த் தமிழ் மக்களினதும் அமைப்புக்களினதும் பங்களிப்பை காத்திரமாகவும் துரிதமாகவும் முன்னெடுத்துச் செயற்படுவதில் அவர்களோடு இணைந்தும் தனித்தும் இந்த இணையம் செயற்படும். அத்துடன், கனடா வாழ் தமிழரிடையே பரஸ்பரம் ஒற்றுமையை வளர்ப்பதோடு கனடாவின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் அவர்கள் மேம்படவும், தமிழரது பாரம்பரிய மொழி, இன, கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இவ்விணையம் பாடுபடும்.

**4. இலச்சினை:**

இணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலச்சினை பயன்படுத்தப்படும்.

**5. கொடி:**

இணையத்தின் கொடி அமைப்பு, இணைய நிர்வாக சபையால் தீர்மானிக்கப்படும்.

**6. நோக்கம்:**

6.1 ஈழத்தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் வரலாற்றுத் தேக்கத்திலிருந்து அவர்களை மீட்டெடுத்து இயல்பு வாழ்வைப் பெற்றுக் கொள்ள உழைத்தல்.

6.2 ஒரு தேசிய இனமாகிய அவர்களுக்குச் சுதந்திரம், சுயநிர்ணயம், சுயாட்சி, இறைமை என்னும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு உழைத்தல்.

6.3 தொடர்ந்தும் ஈழத் தமிழரது பொருளாதார, கலாச்சார மேன்மைக்காக உழைத்தல்.

6.4 கனடா வாழ் தமிழரிடையே பரஸ்பரம் ஒற்றுமையை வளர்ப்பதோடு அவர்கள் கனடிய அரசியல், பொருளாதாரத்தில் மேம்பட்ட பங்கினை வகிக்கவும், தமிழரது பாரம்பரிய மொழி, இன, கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்தல்.

6.5 நாம் உலக மக்கள் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற வகையில் உலக மக்கள் அனைவரதும் மனித உரிமைகள், மனித சுதந்திரம் ஆகியவற்றைப் பேண உழைத்தல்.

6.6 மனிதாபிமானச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. நிறைவேற்று வழிமுறைகள்:

7.1 இணையத்தின் சகல செயற்பாடுகளும் கனடா நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும், முற்றிலும் வெளிப்படையாகவும், சனநாயக விழுமியங்களின் அடிப்படையிலும் அமைதல்.

7.2 கனடா வாழ் தமிழ் பேசும் மக்களை அணிதிரட்டி, இந்த நோக்கத்திற்காகச் செயலாற்றும் அனைத்துத் தரப்பினரிடையேயும் முழுமையான புரிந்துணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் செயற்பட வைக்க உழைத்தல்.

7.3 இணையத்தின் நோக்கங்களை அடைவதற்கு இணைந்து செயற்படுகின்ற சகல அமைப்புக் களையும் தனியாரையும் உள்ளடக்கிய செயற்குழுவை உருவாக்கிப் பொது வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

7.4 இணையத்தின் நோக்கத்தை அடைவதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை எத் தரப்பினர் முன்னெடுக்க விரும்பினாலும் அச் செயற்பாடுகளைப் பொது வேலைத் திட்டத்தின் கீழ் அட்டவணைப் படுத்தி, செயற்குழுவின் வழிக்காட்டலுடன், செயற்பட வைத்தல். அவ்வேலைத் திட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து முழுமையாகச் செயலாற்ற வலியுறுத்தல்.

7.5 செயற்குழு உருவாகும் வரை இணையத்தின் நோக்கத்துடன் ஒத்த செயற்பாடுகளை யார் முன்னெடுத்தாலும் அதில் இணையமும் முழுமையாகப் பங்கேற்று அதனால் அதி உச்சப் பலனை மக்கள் அடைவதற்கு உழைத்தல்.

7.6 இணையத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் சுய இலாபம், விருப்பு, பதவி, புகழ் என்பவற்றைப் புறம் தள்ளி இணையத்தின் நோக்கத்தையும் மக்களையுமே முதன்மைப் படுத்திச் செயற் படுவதை உறுதி செய்தல்.

## 8. உறுப்பினர்:

### 8.1 தகுதி

8.1.1 தமிழராக இருப்பதுடன் 18 வயது பூர்த்தியானவராகவும் கனடாவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருக்க வேண்டும்.

8.1.2 இணையத்தின் யாப்பை ஏற்று பணியாற்றும் விருப்பத்தை வெளிப்படுத்தி அங்கத்தவர் படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

8.1.3 அங்கத்துவத்திற்கான விண்ணப்பத்தை ஏற்கும், நிராகரிகும் உரிமை நிருவாக சபைக்கு உண்டு. விண்ணப்பம் நிர்வாகசபையால் அங்கீகரிக்கப்பட்டு, சந்தாப்பணம் செலுத்தப்பட்டதன் மேல், ஒருவர் அங்கத்தவர் ஆகிறார்.

8.1.4 அங்கத்தவர் சந்தாப்பணம், ஒரு வருட அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும்.

8.1.5 ஒருவர் பத்து வருட சந்தாப்பணத்தை ஒன்றாகச் செலுத்துவதன் மூலம் ஆயுட்கால அங்கத்தவராகலாம்.

8.1.6 சந்தாப்பணம் $20 ஆகும். இத்தொகை நிர்வாகசபையின் அங்கீகாரத்துடன் மாற்றப்படலாம். செலுத்தப்பட்ட சந்தாப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

### 8.2 அங்கத்துவ நீக்கம்:

8.2.1 சுயவிருப்புடன் விலகும் சந்தர்ப்பத்தில் நிருவாகசபைக்குத் தனது விருப்பை அறியத்தருதல்

8.2.2 சந்தாப்பணம் காலாவதியாதல்

8.2.3 இணையத்தின் நோக்கத்திற்குப் பாதகமான செயற்பாடு காரணமாக எந்தவொரு அங்கத்தவரும், (சமூகமளிக்கும்) நிர்வாக சபையின் மூன்றில் இரு பங்கு அங்கத்தவரின் தீர்மானத்தின் மீது அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படலாம். அல்லது நீக்கப்படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. இணையத்தின் அதிகார அமைப்பு:

9.1 **நிருவாக சபை:**

9.1.1 பொதுச்சபைக் கூட்டத்தில், இணைய அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படும் 11 முதல் 21 வரையிலான அங்கத்தவர்கள் கொண்ட நிருவாக சபையால் இணையம் நிருவகிக்கப்படும். நிருவாக சபையில் அங்கத்துவம் வகிப்பதற்கு ஒருவர் ஆகக் குறைந்தது ஆறு மாதங்கள் இணைய அங்கத்தவராக இருந்திருக்க வேண்டும்.

9.1.2 பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபை அங்கத்தவர்கள், நிருவாக சபையின் செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்குத் தம்முள், பின்வரும் **நிறைவேற்றுக் குழுவைத்** தெரிவு செய்வர்:

தலைவர்<br>
உபதலைவர்<br>
செயலாளர்<br>
இணைச் செயலாளர்<br>
பொருளாளர்<br>
இணைப் பொருளாளர்<br>
தொண்டர் அணித்தலைவர்<br>
தொண்டர் அணி உபதலைவர்<br>
இணையப் பேச்சாளர்

9.1.4 ஒரு நிருவாக சபையின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள் ஆகும்.

9.1.5 **நிருவாகசபை** ஆகக் குறைந்தது இரு மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும். நிருவாகசபைக் கூட்டத்திற்கான நிறைவெண் அதன் மொத்த அங்கத்தவர் தொகையின் 50% த்திற்கு மேற்பட்டதாகும்.

9.1.6 **நிறைவேற்றுக்குழு** மாதம் இருமுறை கூட வேண்டும். இக் கூட்டத்திற்கான நிறைவெண் 5 ஆகும்.

9.1.7 நிருவாகசபையின் 1/3 பங்கு அங்கத்தவர்களின் எழுத்துமூல வேண்டுகோளுக்கிணங்க அல்லது தலைவரும் செயலாளரும் அத்தியாவசியம் என்று கருதும் சந்தர்ப்பத்தில் விசேட நிருவாகசபைக் கூட்டம் கூட்டப்படலாம்.

9.1.8 பதவிக்காலம் முடியுமுன் ஒரு அங்கத்தவர் தம் அங்கத்துவத்தை இழந்தால் அவர் வகிக்கும் ஏனைய பொறுப்புக்களில் இருந்தும் அவர் விலக்கப்படுகிறார்.

9.1.9 நிருவாகசபையில் வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், நிருவாக சபையின் பதவிக் காலத்தின் மீதமுள்ள காலப் பகுதிக்கு மட்டுமே அவ் வெற்றிடம் நிருவாக சபையால் நிரப்பப்படலாம்.

9.1.10 சேவைகளைப் பன்முகப்படுத்திச் செயற்படுத்தும் நோக்கோடு உபகுழுக்களைத் அமைத்து, வேறு விசேட அலுவல்களை ஒழுங்கு செய்வதற்கு, இந்த யாப்பின் ஏற்பாடுகளுக்கு முரண்படாத விதிகளை வகுக்கும் அதிகாரம் நிருவாக சபைக்கு உண்டு.

9.1.11 இணையத்தின் செயற்பாடுகளைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரம் நிருவாக சபைக்கு உண்டு.

9.1.12 நீண்ட காலம் இணையத்திற்குக் குறிப்பிடத்தக்க சேவை ஆற்றியவர்களுக்கும் கணிசமான நன்கொடை வழங்கியவர்களுக்கும் அவர்களது பிரத்தியேக பங்களிப்பை கௌரவிக்கும் செயற்பாட்டில் ஈடுபடும் அதிகாரம் நிருவாக சபைக்கு உண்டு.

9.1.13 நிர்வாகசபை, இணையத்தின் போசகர், நம்பிக்கைப் பொறுப்பாளர், ஆலோசகர் முதலியோரைத் தேவைக்கேற்ப நியமிக்கும் அதிகாரமுடையது.

9.1.14 நிர்வாகசபையில் கொண்டு வரப்படும் தனிநபர் பிரேரணைகள் கூட்ட நாளுக்கு இரு வாரங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவேண்டும்.

9.1.15 தலைவரின் பதவிக் காலம் தொடர்ந்து இரு தவணைகளுக்கு மேற்படலாகாது.

## 9.2 பொதுவான நடைமுறைகள்:

### 9.2.1 பொறுப்புகளை ஒப்படைத்தல்:

புதிதாகப் பதவி ஏற்கும் நிறைவேற்றுக் குழுவிடம் பதவி விலகிச் செல்லும் நிறைவேற்றுக் குழு 21 நாட்களுக்குள் தமது பொறுப்புக்களையும் ஆவணங்கள், அறிக்கைகள் உள்ளிட்ட இணையத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் ஒப்படைக்க வேண்டும். இணையத்தின் சொத்துக்களை ஒப்படைப்பதோடு வங்கிக் கணக்கும் புதிய உத்தியோகத்தர்களின் பெயருக்கு மாற்றப்பட ஆவன செய்யவேண்டும்.

### 9.2.2 வாக்கெடுப்பு:

எந்த ஒரு சபை அல்லது குழுவில் வாக்கெடுப்பு இடம் பெற்றால் அது இரகசிய வாக்கெடுப்பாகவே இருக்க வேண்டும்.

### 9.2.3 ஒப்பந்தங்களில் கையொப்பம் இடல்:

நிருவாக சபையின் அங்கீகாரத்தின் மேல் இணையத்தின் சார்பாக இணையத்தின் தலைவர் அல்லது செயலாளர் கையொப்பம் இடலாம்

### 9.2.4 பதிவேடுகள்:

இணையத்தின் புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள், நிதி உள்ளிட்ட சகல ஆவணங்களும் சொத்துக்களும் இணையத்தின் பாதுகாப்பில், இணையத்தின் பணிமனையில் அல்லது நிர்வாக சபை தீர்மானிக்கும் இடத்தில் வைத்துப் பாதுகாக்கப்படவேண்டும்.

# 10. இணையத்தின் நிதி:

### 10.1 நிதியாண்டு:

இணையத்தின் நிதியாண்டு மே முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரையான ஒரு முழு ஆண்டாக அமையும்.

10.2 இணையத்தின் நிதியை தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் சேர்ந்து ஏற்படுத்தும் வங்கிக்கணக்கில் வைப்பிலிட வேண்டும்.

10.3 இணையத்தின் சார்பாக இணையத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரில் இருவர் சேர்ந்து காசோலையில் கையொப்பம் இடும் அதிகாரம் பெறுகின்றனர். நிதி பயன்படுத்தும் போது $500 க்கு மேற்படாத தொகைக்கு நிறைவேற்றுக் குழுவின் அனுமதியும், $5,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு நிர்வாக சபையின் அனுமதியும் பெற வேண்டும்.

### 10.4 கணக்காய்வாளர்:

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிருவாக சபையின் கணக்குகளைக் ஆய்வு செய்வதற்கெனக் கௌரவ கணக்காய்வாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

# 11. உபகுழுக்கள்:

உபகுழுக்களின் வேலைத்திட்டம் அவற்றின் தலைவரால் நிருவாக சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு நிருவாக சபையின் அங்கீகாரத்தின் மேல் அது நடைமுறைப்படுத்தப்படும். அந்தந்தச் செயற்பாட்டின் நிறைவுடன் அல்லது இரத்துடன் அந்தந்த உபகுழுக்களும் கலைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. வருடாந்தப் பொதுக் கூட்டம்:

12.1 வருடாந்தப் பொதுக்கூட்டம், வருடம் தோறும் மே மாதத்தில் கூட்டப்படும். வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான திகதி, நேரம், இடம் என்பனவற்றை நிருவாக சபை தீர்மானிக்கும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காகக் கூட்டத்திகதியில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான அதிகாரம் நிருவாக சபைக்கு உண்டு. எவ்வாறெனினும் அடுத்தடுத்த இருவருடாந்தப் பொதுக் கூட்டங்களிடையே 24 மாதங்களுக்கு மேற்பட்ட கால இடைவெளி இருக்கக் கூடாது.

12.2 பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல், ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே அங்கத்தவர் களுக்குத் தரப்பட்டிருக்க வேண்டும்.

12.3 ஒரு மாதத்திற்கு மேலாக அங்கத்துவம் வகித்தவர்கள் மட்டுமே பொதுக்கூட்டத்தில் பங்கு பற்றவோ அல்லது வாக்களிக்கவோ முடியும்.

12.4 பொதுக் கூட்டத்திற்கான நிறைவெண் மொத்த அங்கத்தவர் தொகையில் அரைப்பங்காகும்.

12.5 வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வருடாந்த அறிக்கையும் பொருளாளர் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12.6 நிருவாகசபையின் தீர்மானத்தின் பிரகாரம் அல்லது மொத்த அங்கத்தவர்கள் தொகையின் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தவர்களின் எழுத்து மூல வேண்டுகோளுக்கிணங்க விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படலாம்.

12.7 அத்தகைய விசேட பொதுக் கூட்டத்திற்கு இரண்டு வார முன்னறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

12.8 தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல், கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்படலாம்.

12.9 பொதுக்கூட்டத்தில் கொண்டுவரப்படும் தனிநபர் பிரேரணைகள் கூட்ட தினத்திற்கு மூன்று வாரங்களுக்கு முன் செயலாளரிடம் எழுத்துமூலமாக கொடுக்கப்பட வேண்டும்.

## 13. உத்தியோகத்தர்களின் கடமைகள்:

13.1 **தலைவரின் கடமைகள்**

13.1.1 இணையம் சிறப்பாக, வினைத்திறனுடன் இயங்குவதற்குப் பொறுப்பாக இருத்தல்.

13.1.2 இணையத்தின் இரு சபைகளுக்கும் நிறைவேற்றுக் குழுவுக்கும் தலைமை தாங்கிக் கூட்டங்களை நடத்துதல்.

13.1.3 இணையம் சார்ந்த சகல அறிக்கைகள் அறிவித்தல்களிலும் செயலாளரோடு சேர்ந்து கையொப்பமிடல்.

13.1.4 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தத்தம் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு உதவியும் ஆலோசனையும் வழங்குவதோடு அவரவர் செயற்பாடுகள் முறையாக நடப்பதை உறுதிப்படுத்துதல்.

13.1.5 பொருளாளர், செயலாளரோடு சேர்ந்து நிதி விடயங்களைக் கையாள்தல்.

13.2 **செயலாளரின் கடமைகள்**

13.2.1 நிர்வாகம், ஏனைய செயற்பாடுகள் சம்பந்தமான இணையத்திற்குச் சொந்தமான சகல ஆவணங்கள், அறிக்கைகள், கடிதத் தொடர்புகள், கோப்புகள், இலச்சினை போன்ற அனைத்தையும் பாதுகாத்து வைத்திருத்தல். தேவை ஏற்படும் பட்சத்தில் அவற்றை உரியவர்கள் அணுகுவதற்கு வசதி செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.2.2 யாப்பு விதிகளுக்கு அமைவாகச் சகல கூட்டங்களையும் தலைவர் அனுசரணையுடன் கூட்டுவதுடன் தலைவருடன் ஆலோசித்துக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல்களையும் தயாரித்தல்.

13.2.3 கூட்ட அறிக்கைகளைத் தயாரித்து அடுத்து வரும் கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

13.2.4 தலைவரோடு சேர்ந்து அறிக்கைகள் அறிவித்தல்கள் ஆகியவற்றுக்கு கையொப்பம் இட்டு வெளியிடுதல்.

13.2.5 ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தல்.

13.2.6 இணையத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் மேற்பார்வையிடல்

13.2.7 பொருளாளர், தலைவரோடு சேர்ந்து நிதிவிடயங்களைக் கவனித்தல்.

**13.3 பொருளாளரின் கடமைகள்:**

13.3.1 இணையத்தின் நிதி சம்பந்தமான சகல ஆவணங்கள், பதிவுகள், கோவைகள், அறிக்கைகளைப் பாதுகாத்து வைத்திருத்தல்.

13.3.2 சகல வரவு செலவுக்கணக்குகளையும் முறையாக வைத்துக் கொள்வதோடு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், செலவு, கொள்வனவுப் பற்றுச்சீட்டுக்கள் உள்ளிட்ட ஆவணங்களை முறையாகப் பேணி வைத்திருத்தல்.

13.3.3 பொருளாளர், இணையத்தின் நிதியை தலைவர், செயலாளரோடு சேர்ந்து வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிட்டு வைக்க வேண்டும். இம் மூவரில் யாராவது இருவரது கையொப்பத்துடன் தான் நிதி வங்கியிலிருந்து மீளப்பெறக்கூடியதாக இருக்க வேண்டும். இணையத்தின் விலை மதிப்புள்ள பொருள் ஏதாவது இருப்பின் அவற்றையும் வங்கியிலோ அல்லது நிருவாக சபை தீர்மானிக்கும் வேறு பாதுகாப்பான இடத்திலோ வைத்திருக்க வேண்டும். வங்கிக் காசோலைப் புத்தகங்களும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் பொருளாளரின் பாதுகாப்பிலேயே இருக்க வேண்டும்.

13.3.4 யாப்பு விதிகளுக்கு அமைவாகத் தலைவர், செயலாளர், நிறைவேற்றுக் குழு அல்லது நிர்வாக சபையின் பணிப்புக்கமைவாகப் பொருளாளர் நிதிக்கொடுப்பனவுகளைக் கையாள்தல்.

13.3.5 ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அந்த ஆண்டுக்கான பரிசோதிக்கப்பட்ட நிதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிரதிகளை எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுக் கூட்டத்திற்குப் 14 நாட்களுக்கு முன்னதாக கொடுத்து அவர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

**13.4 ஏனைய அலுவலரின் கடமைகள்**

ஏனைய அலுவலரின் கடமைகளை நிருவாக சபை தீர்மானிக்கும்.

## 14 யாப்பினது பொருள் கோடலும் திருத்தங்களும்:

14.1 இந்த யாப்பின் ஏதாவது ஏற்பாடுகளின் பொருள் கோடல் தொடர்பில் ஏதேனும் ஐயங்கள் எழுமிடத்து நிருவாக சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் அபிப்பிராயமே முடிந்த முடிவாகக் கொள்ளப்படும். இந்த யாப்பில் விதந்து கூறப்படாத சகல விடயங்கள் தொடர்பிலும் நிருவாக சபையின் தீர்மானங்களே முடிந்த முடிபாகும். இந்த யாப்பில் கூறப்பட்டுள்ள எந்தவொரு ஏற்பாட்டுக்கும் மாற்றங்கள் திருத்தங்கள் ஏற்படுத்தும் பூரண அதிகாரம் பொதுச்சபையையே சார்ந்தது. வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் அல்லது அந்த நோக்கத்திற்காகக் கூட்டப்படும் விசேட கூட்டமொன்றில் உரிய மாற்றங்கள், திருத்தங்கள் முன் வைத்து ஆராயப்பட்டு சமூகமளிப்போரில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படும்.

**யாப்பிற்கும் அதன் மொழிபெயர்ப்புகளுக்குமிடையே ஒவ்வாமை காணப்படுமிடத்து தமிழ் யாப்பே மூலமாகக் கொள்ளப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.2 **கலைத்தல்:**

இணையம் கலைக்கப்படுமிடத்து அல்லது முடிவுக்கு வருமிடத்து அதன் அசையும் அசையாச் சொத்துக்கள் யாவும் ஒத்த நோக்கங்களையுடைய மற்றொரு தாபனத்துக்கு பொதுச்சபையின் பெரும்பான்மையினரின் அபிப்பிராயப்படி மாற்றப்படும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் தற்பொழுது ஒரு காப்புறுதி முகவரும் கூட
## நிகழ்காலத் திட்டம் எதிர்காலப் பாதுகாப்பு

### உங்களுக்குத் தேவையான

- Life Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- RRSP

**ஒருவர் இறக்கும்போது அவரின் வாழ்க்கை தெரிகிறது**
**அதே நேரம் ஒருவரின் மரணம் அவரின் காப்புறுதியில்த் தங்கியிருக்கிறது**

| தொகை | $250,000 | | $350,000 | | $500,000 | | $1,000,000 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F |
| 30 வயது | $17 | $13 | $22 | $16 | $30 | $21 | $54 | $37 |
| 40 வயது | $25 | $19 | $33 | $25 | $44 | $30 | $82 | $55 |
| 50 வயது | $61 | $43 | $84 | $58 | $118 | $80 | $231 | $155 |



பிள்ளைகளுக்கான காப்புறுதிகள்

71 வயதிற்கு முன் மருத்துவப் பரிசோதனை இல்லாமல் நிரந்தர காப்புறுதியாக மாற்றக்கூடியது



ஒன்றுக்கு மேற்பட்ட பல காப்புறுதி ஸ்தாபனங்களோடு நான் பணிபுரிவதினால், உங்களுக்குப் பொருத்தமான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்

# தயாபரன் ஆறுமுகம்
***Insurance broker***

**416-889-3088, 905-426-6624, 905-426-7713**

நான் உங்கள் வீட்டுப் பிள்ளை! இது ஊரறிந்த உண்மை!!

**வீடு வாங்க, விற்க அழையுங்கள்**

# தயாபரன் ஆறுமுகம்
***Sales Representative***



***Cell: 416-889-3088*** email: taiarumugam@hotmail.com
***Direct: 905-426-7713 Office: 416-290-1200***

Century 21

Century 21 Affiliate Realty Inc., Brokerage
**80 Corporate Drive Suite# 208,**
**Toronto, On, M1H 3G5**

**Ajax, Whitby, Oshawa, Pickering**
இல் மனதிற்கேற்ற வீடு வாங்க, நல்ல விலைக்கு விரைவாக வீட்டை விற்க Ajax இல் கடந்த 10 ஆண்டுகளாக வாழும் என்னை அழையுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதுளி பெரு வெள்ளம்

தாயகத்தில் போர் அனர்த்தத்தினால் பாதிக்கபட்ட எமது மக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமை புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் யாவருக்குமான வாழ்நாள் முழுவதற்குமான கடமையாகும். அவர்களுடைய அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் பலரும் பல காரணங்களைச் சொன்னாலும், அவர்களுக்கு நாம் உதவிக்கரம் கொடுக்காவிட்டால் இறந்தவர்களின் தியாகங்களும், உயிர் வாழ்பவர்களின் ஏக்கங்களும் எம்மையும், எமது அடுத்த தலைமுறையையும் தொடர்ந்து பற்றும்.

**"தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என்பது புறநானூறு. எது எப்படி இருப்பினும் இந்த மக்களின் துயர் துடைக்க எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டியது எமது கடமை. அவர்களுக்குள்ள தேவைகள் யாவற்றையும் அறிந்து செயலாற்றுவதும், பூர்த்தி செய்வதென்பதும் ஒரு தனி மனிதனாலோ அல்லது ஒரு சில அமைப்புகளினாலோ முடிகின்ற காரியம் அல்ல. இம்முயற்சியில் பல அமைப்புகள் பல விதமான அணுகுமுறைகளில் தமது பங்களிப்பை செலுத்தி வருகின்றன. இவர்களில் ஒன்றையோ பலவற்றையோ நாம் ஏற்கெனவே சார்ந்திருந்தாலும், ஏற்கெனவே உதவிகளைச் செய்துகொண்டிருந்தாலும் இவ்விதமான பணிகளை இதய சுத்தியுடனும், திறந்த மனப்பாங்குடனும், வெளிப்படையான கணக்கு வழக்களுடனும் முன்னெடுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் எமது ஊக்கத்தையும், தார்மீக ஆதரவையும் தொடர்ந்து நல்க வேண்டியது ஆரோக்கியமான சமூகப்பண்பாகும்.

இந்த வகையில் வி. மகாலிங்கம் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டலிலும் உருவாகிப் பணியிற்றும் கனடாத் தமிழர் இணையம் அமைப்பு டிசம்பர் 18ம் திகதி, சனிக்கிழமை ஐயப்பன் ஆலய மண்டபத்திலே நடாத்தவிருக்கும் அன்புக்கரங்கள் 2010 கலைவிழாவிறகான எமது ஆதரவானது **"சிறு துளி பெரு வெள்ளம்"** என்பதுபோல இவர்களுக்கு ஊக்கமாகவும், எமது தாயக மக்களுக்கு ஆக்கமாகவும் பரிணமிக்கும்.

***யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை***
***யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி***
***யாவர்க்குமாம் ஆவுக்கு ஒரு வாயுறை***
***யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே***
***-திருமந்திரம்***

ஆ- பசு; வாயுறை- ஒரு வாய் புல்.

வைத்திய கலாநிதி இ. லம்போதரன்
தலைவர், அனைத்துலக மருத்துவ நல அமைப்பு, கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் கடமையில் இருந்து விலகி விடாது புலம்பெயர் சமூகம்

சிங்களப் பேரினவாதமும் அதன் விளைவாகத் தோன்றிய தமிழீழ விடுதலைப் போராட்டமும் தான் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை தோற்றுவித்திருந்தன.

புலம்பெயர் தமிழ்ச்சமூகம் உலகளவில் இன்று வலுவானதொன்றாக மாறியுள்ளது என்றால் அது மிகையான கருத்தல்ல. கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, நோர்வே, இத்தாலி, அவுஸ்ரேலியா என்று அமெரிக்க, ஐரோப்பிய அவுஸ்ரேலியக் கண்டங்களில் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் வலுப்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் மரபுவழிப் போராக மாற்றம் பெற்றபோது அதன் ஆணிவேராக மாறியது புலம்பெயர் தமிழ்ச் சமூகமே.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் நிதி ஆதாரமில்லாமல் நிச்சயமாக விடுதலைப் புலிகளால் ஆயுதப் போராட்டத்தை இந்தளவு வீரியத்துடன் நடத்தியிருக்க முடியாது. இந்த மாற்றமானது 1990களின் நடுப்பகுதியில் தோன்றியது.

முள்ளிவாய்க்கால இறுதிப்போர் வரைக்கும்- புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் நிதி ஆதாரத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆச்சரியம் மிக்க சாதனைகளையும் அபரிமிதமான ஆற்றலையும் உலகிற்கு நிரூபித்தது.

வன்னியில் இறுதிப்போர் நடந்து கொண்டிருந்த போது போரை நிறுத்தும் நோக்கில் புலம்பெயர் சமூகம் வலுவாகக் கிளர்நது நின்று அமைதி வழியில் போராடியது. ஆனால் தமிழரின் துரதிஸ்டம்- முள்ளிவாய்க்காலில் ஆயுதப்போராட்டம் பேரழிவுடன் முடிந்து போனது. ஆனாலும் புலம்பெயர் சமூகத்தின் வலு இன்னமும் குன்றிவிடவில்லை என்பதை அண்மையில் பிரித்தானியாவில் மகிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கசப்பான உணர்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. சிங்கள அரசின் தலைவரையே உரை நிகழ்த்த விடாமல் திருப்பி அனுப்பியது பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் ஒன்றியம். இதற்குக் காரணம் புலம்பெயர் தமிழர்களின் பலம் தான்.

இதே வலுவுடன் புலம்பெயர் சமூகம் ஒன்றுபட்டிருந்தால் வன்னியில் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களை துயரில் இருந்து மீட்க முடியும் என்பது உறுதி.

வன்னியில் கிட்டத்தட்ட மூன்று இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் மீளக்குடியேறியுள்ள போதும் அவர்களின் வாழ்விடங்கள் இன்னமும் சீர்செய்யப்படவில்லை. தொழில் வாய்ப்புகள் இன்னும் ஒழுங்குபடுத்தப்படவில்லை.

மிதிவெடி அபாயம், இராணுவ அடக்குமுறை என்று பல்வேறு காரணங்களால்- மீளக்குடியேறிய மக்களால் தமது இயல்பான காரியங்களைச் செய்ய முடியாதுள்ளது. இதைவிட போதிய உதவிகள் இல்லாமல் தமது தொழில்களை மீள ஆரம்பிக்க முடியாத அவலத்தில் ஏராளமானோர் உள்ளனர்.

உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட பலரும் அடுத்த வேளை உணவுக்கு வழியற்ற நிலையில் திண்டாடுகின்றனர். போரின் முடிவு தமிழர்களுக்கு தந்துள்ள சாபக்கேடு இது. இதிலிருந்து எமது சமூகம் எப்படி மீளப் போகிறது?

அண்மையில் சில தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவைச் சந்தித்தனர். அப்போது பொருளாதார ரீதியாக நெருடிக்கடியில் சிக்கியுள்ள வன்னிப்பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு சிங்களப் பேரினவாதியான மகிந்த ராஜபக்ஸ வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் வங்கி வைப்புக் கணக்குகளைக் காட்டி இவர்களுக்கா உதவி தேவை என்று எள்ளி நகையாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து ஒன்றறை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது.

வன்னியில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலவாழ்வுக்காக- புனர்வாழ்வுக்காகச் சிங்கள அரசாங்கம் ஒன்றையுமே செய்யப் போவதில்லை. ஏதோ வெளிநாடுகளும், உதவி நிறுவனங்களும் கொடுக்கும் உதவிகளைக் கொண்டு போய்த் தமது கையால் கொடுத்து விட்டு அதைப் பிரசாரப்படுத்தி அரசியல் இலாபம் தேடுகின்ற முயற்சியில் தான் சிங்கள தேசம் இருந்து கொண்டிருக்கிறது.

போரில் பங்கெடுத்த சிங்களப் படையினரின் குடும்பங்களுக்காக வரவுசெலவுத் திட்டத்தில் 3000 மில்லியன் ரூபாவை ஒதுக்கிய சிங்கள அரசாங்கம்- அதே போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக ஒரு மில்லியன் ரூபாவையாவது ஒதுக்கவில்லை. அதுமட்டுமன்றி தமிழர்களுக்கு உதவிகளை வழங்கும் அனைத்துலகத் தொண்டர் நிறுவனங்களையும் வன்னி உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் இருந்து, வெளியேற்றும் முயற்சியிலும் சிங்கள அரசு இறங்கியுள்ளது.

இதன் விளைவுவாக பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் அநாதரவான நிலையில் விடப்படவுள்ளனர்.

சிங்கள அரசு தானும் செய்யாமல் ஏனைய தொண்டர் நிறுவனங்களையும் செய்ய விடாமல்- வைக்கோல் பட்டடை நாய் போல நிற்கிறது. இது தமிழரை நடுத்தெருவுக்குக் கொண்டு வர சிங்களப் பேரினவாதம் போடும் சதித்திட்டம்.

இந்த நிலையில் வன்னியிலும் ஏனைய பகுதிகளிலும் போரினால் சீரழிந்து போயுள்ள தமிழர்களின் வாழ்வைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு - முற்றுமுழுதாகப் புலம்பெயர் சமூகத்தின் மீது விழுந்துள்ளது.

புலம்பெயர் சமூகம் வன்னிப் பகுதி மக்களை வாழ வைப்பதற்கு பல்வேறு முறைகளில் உதவ முடியும். அதற்கான வழிமுறைகள் உருவாக்கப்படுவதும் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுவதும் முக்கியமானது.

புலம்பெயர் சமூகத்தில் ஏராளமான பொருளாதார விற்பன்னர்கள் உள்ளனர். பொறியியல் வல்லுனர்கள், மருத்துவ நிபுணர்கள், திட்டமிடலாளர்கள் உள்ளனர். இவர்கள் எல்லாம் எப்படி எப்படி தமிழரின் மீட்சிக்கு உதவ முடியும் என்று ஆராய்ந்து புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும்.

வன்னி மீன்பிடியையும் விவசாயத்தையும் அதிகம் நம்பியுள்ள பிரதேசம். அங்கு புதிதாக ஆடைத் தொழிற்சாலைகளை அமைக்கப் போவதாக சிங்கள அரசு கூறிக் கொண்டிருக்கிறது.

அங்கு குறைந்த சம்பளத்தில்- கொத்தடிமைகள் போன்று தமிழ் இளைஞர், யுவதிகள் நடத்தப்படும் ஆபத்து இருக்கிறது. ஆனால் சிறிலங்காவின் ஆடைத் தயாரிப்புத் தொழில் இப்போது அவ்வளவு பிரகாசமான எதிர்காலத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்தநிலையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் ஆடை தயாரிப்புத்துறையை நோக்கி தவறாக வழிகாட்டப்படுகின்றனர். அங்கு வேறெந்த மாற்று ஏற்பாடுகளும் இல்லாதால் - அதுவே அவர்களுக்கு சிறந்த வழியாக இப்போது தெரிகிறது.

கைத்தொழில்துறைகளில் வன்னியில் எத்தகைய மாற்றத்தை உருவாக்கலாம் என்பது பற்றிய புதிய சிந்தனைகள் புலம்பெயர் சமூகத்தில் இருந்தே உருவாக முடியும்.

வன்னியில் உள்ள மட்டுப்படுத்தப்பட்டளவு வளங்களும் அங்குள்ள சூழலும் இதுபற்றிய சிந்தனையை செய்வதற்கோ ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்காது.

புலம்பெயர் தமிழர்கள் நிதியுதவி என்ற வகையில் மட்டுமன்றி தமிழரின் தாயகத்தை எப்படி மீளக்கட்டியெழுப்பலாம் என்று திட்டமிடுவதிலும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். அத்துடன் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் புலம்பெயர் தமிழர்களால் தான் பெரிதும் உதவ முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ரீதியாக தமிழர்கள் தலையெடுப்பதன் மூலமே உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியும்.

ஏனென்றால் பொருளாதார ரீதியாக நலிந்து போய்க் கிடக்கும் சமூகத்திடம் இருந்து நிச்சயமாக உரிமைக் கோசம் எழும்பப் போவதில்லை. ஏனென்றால் போரினால் அந்தளவுக்கு அவர்கள் அடிபட்டுப் போயுள்ளனர். அவர்கள் எங்கே நிவாரணம் கொடுக்கப்படுகிறது, எங்கே அரிசி கொடுக்கப்படுகிறது என்று அலையும் நிலை தான் இப்போது உள்ளது.

இந்தநிலையை மாற்ற வேண்டும்.

இலவசத்துக்காக அலையும் நிலையில் இருந்து வன்னி மக்களை மாற்றினால் தான் அவர்களை உரிமை கொண்ட மனிதர்களாக மாற்ற முடியும்.

அதைவிட பொருளாதார ரீதியாகப் பலமாக இல்லாத எந்தவொரு இனத்தையும் உலகம் கண்டுகொள்ளவும் போவதில்லை.

அதற்கு பொருளாதார ரீதியான புரட்சி ஒன்று ஏற்பட வேண்டும்.

இது ஓரிரண்டு நாட்களிலோ மாதங்களிலோ ஏற்படக் கூடியதல்ல.

ஏற்கனவே போரினாலும் பல்வேறு துயரங்களினாலும் துவண்டு போயுள்ள மக்களைக் கை தூக்கி விடுவதற்கு சில வருடங்கள் பிடிக்கலாம்.
வன்னியில் பெருந்தொகையான குடும்பங்கள் பிரதான உழைப்பாளரை அல்லது குடும்பத் தலைவரை இழந்த நிலையில் வாழ்கின்றன.

அத்தகைய குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பு அல்லது வருமான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் இதுவே சமூகத்தின் மிகப் பெரிய அவலமாக உருவெடுத்து விடும்.

குடும்பத் தலைவர்களைப் போரில் இழந்த அல்லது தொலைத்து விட்ட அல்லது சிங்களச் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் நிலையில் அந்தக் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்து விடாதபடி காப்பாற்ற வேண்டியது முக்கியமான கடமை. இந்தக் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு விடப்பட்டால் அதன் சாபம் அனைத்துத் தமிழர்களையும் பற்றிக் கொள்ளும்.

ஏனென்றால் புலம்பெயர் தமிழர்களில் பெரும்பாலானோர் இன்று நிம்மதியாக வெளிநாடுகளில் நிரந்தர குடியுரிமை பெற்று வாழ்வதற்கு இவர்களின் உயிர்க்கொடையும் ஒரு காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

புலம்பெயர் சமூகம் வலுவானது -அதன் பணியும் காத்திரமானது.

அதே போல் தொடர்ந்து வன்னியில் துன்பப்படும் உறவுகளுக்காகக் குரல் கொடுப்பதுடன் நின்று விடாமல் அவர்களைக் கை தூக்கி விடுவதற்கும் உதவ வேண்டும்.

அதன் மூலம் புலம்பெயர் சமூகம் தனியே போருக்கே உதவியது- அவர்கள் போரையும் அழிவுகளையுமே விரும்புகிறார்கள் என்று சிங்கள அரசு மேற்கொள்ளும் பொய்யான பிரசாரங்களையும் உடைத்தெறிய முடியும்.

அதைச் செய்வதற்கு புலம்பெயர் சமூகம் எல்லா வழிகளிலும் துணை நிற்க வேண்டியது இன்றைய தலையாய கடமை.

இந்த வரலாற்றுக் கடமையில் இருந்து புலம் பெயர் சமூகம் விலகி விடாது என்ற நம்பிக்கை வன்னிப்பகுதி மக்களிடம் இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது என்று கனேடியத் தமிழர் இணையம் நடத்தும் நிகழ்ச்சி இதை நிரூபிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆக்கம் தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Centre for War Victims and Human Rights (CWVHR)**

Web : www.cwvhr.org Tel: 416 628 1408

12-10- 2010

வாழ்த்துகிறோம்.

இந்த உலகத்தைக் காலம் காலமாக உலுக்கி எடுப்பது போர் தான். அதில் அகப்பட்டவர்களுக்குத் தான் அதன் வலி தெரியும். இலங்கையிலும் மூன்று தசாப்த காலமாக நடந்த கொடிய போரினால் மிகக் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட தமிழர் உறைந்துபோய் உள்ளனர். போரில் இறந்தோர், ஊனமுற்றோர் குடும்ப உறுப்பினரை இழந்தோர் மூளை பாதிக்கப்பட்டோர் எண்ணில் அடங்கார். இன்னுமே மக்கள் அதிலிருந்து மீள முடியாமல் தத்தளிக்கிறார்கள். ஒட்டி உலர்ந்த உடலையும் அதில் ஒட்டியிருக்கும் உயிரையும் தவிர அனைத்தையுமே இழந்து விட்டார்கள். அவர்களைக் காக்க வேண்டிய அரசே அவர்களை வதைக்கிறது. உதவிக்குப் போன சர்வதேசத் தொண்டு நிறுவனங்களையும் அரசு துரத்தியடிக்கிறது. அனாதரவான அந்த மக்களை அவர்களின் இரத்த உறவுகளான புலம்பெயர் தமிழ் மக்கள்தான் தனிப்பட்ட முறையிலும் சிறுகுழுக்களாகவும் சிறு சிறு அமைப்புகள் மூலமாகவும் முடிந்தவரை காப்பாற்றி வருகிறார்கள். அந்த வகையில் தமது பங்குக்கும் செய்யக்கூடியதைச் செய்வதற்காக கனடாத் தமிழர் இணையம் முயற்சி எடுத்துள்ளது. இங்கு கனடாவில் விடுமுறைக்காலம் வருகிறது. ஒரு கலை விழா மூலம் இங்குள்ள மக்களையும் மகிழ்வித்து அதன் மூலம் அங்குள்ள மக்களுக்கும் உதவ அவர்கள் முற்படுவது வரவேற்கப்பட வேண்டியதே. அவர்களது முயற்சி வெற்றிபெற நாமும் வாழ்த்துகிறோம்.

திரு. அன்ரன் பிலிப்
தலைவர்
போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம்

**Protecting war victims and promoting human rights**

## <u>தாயகத்தில் கனடாத் தமிழர் இணையத்தின் செயற்பாடுகள்:</u>

### தென்மராட்சியில் தங்கியுள்ள வன்னி மாணவர்களுக்கு அறவழிப் போராட்டக் குழு கற்றல் உபகரணம் வழங்கியது

வன்னியில் இருந்து தென்மராட்சிப் பிரதேசத்துக்கு வந்துள்ள மாணவர்களுக்கு இலவச காலணிகள், காலுறைகள் மற்றும் எழுது கருவிகள் வழங்கல் திட்டத்தினை அறவழிப்போராட்டக்குழு நடைமுறைப்படுத்தி வருகிறது.

முதற்கட்டமாக 14 பாடசாலைகளைச் சேர்ந்த 400 மாணவர்களுக்கு இவற்றை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அல்லாரை அ.த.க. பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, மிருசுவில் றோ.க.த. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலை, வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, கெற்பேலி அ.த.க. பாடசாலை, போக்கட்டி அ.த.க. பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை, விடத்தல்பளை கமலாசினி வித்தியாலயம், குடமியன் அ.த.க. பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு மேற்படி உதவிகள் வழங்கப்படுகின்றன.

கனடாவில வாழ்கின்ற தமிழ் அன்பர்களின் நிதியுதவியுடன் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் - கனடா.
VANNI TAMIL COMMUNITY AND CULTURAL CENTRE- CANADA.
இலாப நோக்கற்ற அமைப்பு - Non profitable Organization – Reg. # 1333183.
798 Brimortan , Scarborogh (Ont), M1G 2S9, Canada. TP: 416-644-1113.

ஆசிச் செய்தி ................

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்கள் போர் என்ற போர்வையில் சிதைக்கப்பட்டிருக்கும் இக்காலவேளையில் கனடாவில் இயங்கி வருகினற கனடாத் தமிழர் இணையம் என்ற அமைப்பு அப்பிரதேச மக்களினது நலன்பேணும் வகையில் செயற்படுகின்றமை குறித்து பேருவகை அடைகின்றோம். இதனது தோற்றமும் செயற்பாடுகளும் போர்நடைபெற்ற பிரதேச மக்களது மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் பேருதவியாக அமையுமென்பது திண்ணம்.

இன்று நடைபெற்று முடிந்துள்ள பேரவலத்தினால் சீரழிவுக்குட்பட்டிருக்கின்ற தமிழ்ப் பிரதேச மக்களினது பொருளாதாரம், கல்வி, இயல்பு வாழ்க்கை, உளவியல் தாக்கம் என்பவற்றில் இருந்து அவர்களை விடுவிக்க இணையத்தினது செயற்பாடு இன்றய காலகட்டத்தில் தொடர்ச்சியாக அவசியமாகின்றது. பேரழிவுக்குட்பட்டிருக்கும் பிரதேசங்களை எல்லவகையிலும் கட்டியெழுப்பவேண்டியது தாயகத்தில் இருந்து புலம் பெயர்ந்த எல்லாத் தமிழ் மக்களினதும் தலையாய கடமையாகும். இதனைப் புலம்பெயர் மக்கள் அனைவரும் நன்குணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் தமிழர் தாயகப் பிரதேசத்தினை மீளக் கட்டியெழுப்புவதோடு அங்கு வாழ்கின்ற மக்களையும் சீர்பெறச் செய்யலாம்.

போரின் கொடூரத்தினால் குடும்ப உறுப்பினர்களை இழந்த குடும்பங்கள், பெற்றோரை இழந்த குடும்பங்கள், உடல் உறுப்புக்களை இழந்த குடும்ப உறுப்பினர்கள், கணவனை இழந்த இளம் விதவைகள், ஊனமாக்கப்பட்ட குடும்பத் தலைவனையுடைய குடும்பங்கள் என்று அடுக்கிச் செல்லக்கூடிய சீரழிந்த குடும்பங்கள் வாழுகின்ற தமிழர் பிரதேசங்களே இன்று எம்முன் உள்ளது. அதே போன்று விளைநிலங்கள், அழிக்கப்பட்டுள்ள குடிமனைகள், அச்சறக்கையற்ற குடிநிலங்கள், இவற்றின் மத்தியிலே கதவுகள் சாரளங்கள் வீட்டுக்கூரைகள் அற்ற கூடாரங்களில் வாழ்க்கை நடாத்தும் எங்கள் உறவுகளின் வாழ்க்கைமுறையே இன்றைய காட்சியாகவும் உள்ளது. இவற்றிடையே இளம்பெண்களுடன், இளம் விதவைகளுடன் சுயபாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் இல்லாமல் வாழ்க்கை நடாத்துங்காலை ஏற்படுத்தப்படுகின்ற அவலங்கள் அவமானச் செயல்கள் நித்தம் நித்தம் நடந்தேறுகின்றன.

இத்துனைக் கொடூரங்களின் மத்தியிலும் வாழத்துடிக்கின்ற எம் உறவுகளது வாழ்க்கையினைப் பல்வேறுவகையிலும் சிறக்கவைக்க கனடாத் தமிழர் இணையமும் அதனது உறுப்பினர்களும் அயராது உழைப்பார்கள் என்பது எங்களது எண்ணமாகும். உங்களது நல்ல எண்ணங்களும் செயல்களும் அம்மக்களது வாழ்க்கைக்குப் பேருதவியாக அமையும். அதன்மூலமாக அவர்கள் தங்களது வாழ்க்கையில் மீட்சியும் உயர்ச்சியும் அடைவார்கள். இந்த மீட்சியும் உயர்ச்சியும் ஓர் குறுகிய காலவேளையில் ஏற்படக்கூடிய விடயமுமல்ல. ஒருவர் இருவரால் ஏற்படுத்தக்கூடிய சீர்திருத்தமுமல்ல. எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே நல்லதோர் பெறுபேற்றை நாம் எதிர்பார்க்க முடியும். இதற்காக நீங்கள் நீண்ட காலம் உழைப்பீர்கள் என நம்புகின்றோம்.

கனடாத் தமிழர் இணையம் கனடாவில் தனது எல்லா முன்னெடுப்புகளிலும் சிறப்பாக இயங்கி இலங்கைத் தமிழர் தாயகப்பிரதேசத்தில் காய்த்துக் கனியாகும் வகையில் கருமமாற்ற வேண்டுமெனக் கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமும் தனது வாழ்துக்களையும் ஆசிகளையும் வழங்கிநிற்கின்றது.

தலைவர்
வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்.
கனடா.
2010/2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V.S.Mahendran
President

**Pacific Spot**

To serve you Better

Tell: (647) 894-3633
Email Pacificspot@hotmail.com

- Travels and tours
- Passport and Visa
- Immigration Aid
- Legal services
- Money Transfers

**2390 Eglinton Ave east Suite 225**
**(Kennedy and Eglinton)**
**Scarborough, ON**
**M1K 2P5**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையே மகாதேவன் சேவை

**எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே.**
**தாயுமானவர் - பராபரக்கண்ணி 221**

மக்கள் சேவையே மகேசன் சேவை, மக்கள் சேவையே மாதவன் சேவை என ஆதிமுதல் இத்தேதிவரை எடுத்தாளப்படுகிறது. மகான்களும் - மனிதர்களும் சொல்லும் ஆப்தமொழி இது. பேசு பொருளும், பேசப்படும் பொருளும், பேசுபவர்களும் மனிதர்களே. இந்த மனிதன் தன்னைப் பற்றிப் பேசும் வேளை பிறரைப் பற்றியும் நிதானமாய் நின்று யோசிக்க வேண்டும். மாந்தர், மனிதர் ஒன்றுதான். மனிதப் பண்பு அதன் அளவுகோல். அவர்கள் கருமமே கட்டளைக்கல். எல்லாம் இந்தச் சாண் வயிற்றுக்காகத்தான். ஆண்டியென்ன, அரசன் என்ன பசியில்லாதவர்களில்லை. பட்டினத்தார் 'சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே' எனப் பாடினார். இஃதோர் பட்டறிவுதான் பசி வந்திடப் பத்தும் பறந்துபோம். 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்' என்றான் பாரதி. அதையடுத்து 'தனி ஒருவனுக்கு உணவிலை யெனின் இச்சகத்தினை அழித்திடுவோம்' என்று முரசு கொட்டினார். இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து கெடுக இவ்வுலதியற்றி யான் என்பது வள்ளுவர் வாய் மொழி. ஒவ்வொருவரும் மனிதப்பசி பற்றித்தான் பிரலாபித்தனர். ஏன் பசி வந்தால் வயிற்றைக் கிள்ளும். பசி ருசியறியாது. கஞ்சியோ கூழோ பசியைத் தீர்க்கும். பசி பசியென்று குழந்தையழுதால் அது விதி விதி யென்று வாளாவிருக்க முடியுமா? பசியாவர்க்கும் பொது. ஏழை பணக்காரன் என்று பேதமில்லை. சங்ககால இலக்கியங்களிலே பசிப்பிணி மருத்துவர் பற்றி வருகிறது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. மனிதன் வளர்க்கும் வீட்டுப் பிராணி-களைப் பற்றி அவன் சிந்தித்திருக்கிறான். வள்ளலார் இதைப் பாட்டாக வடித்திருக்கிறார்.

'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடி னேன் பசியினால் இளைத்தே
வீடுதோறிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பசியினால் வருந்துகின் றோர் என்
நேர் உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேனே'

திரு அருட்பா ஆறாந்திருமுறை 37

தனி மனிதனும், ஏன்? சமூகமும் மனிதனைப் பற்றி, மனித நேயம் பற்றி, மனிதாய நலம், விழுமியம் பற்றி எழுதுவர், முழங்குவர். ஆனால் சாதனை, செயற்பாடு வாயளவிற்றான். மனிதம் நோக, மனிதன் வாழ்வதா? அள்ளி உண்ணும் உணவுக்கா அருமை கெடலாமோ? புனிதமான மனிதத்தின் இனிய வாழ்க்கை என்னாச்சு? மன நலனும், இனநலமும் எங்கே?

'மனநலம் மன்னுயிர்க்காக்கம் இனநலம்
எல்லாப்புகழும் தரும்'

வள்ளுவம் 457

மனித இனம் மாண்புடைத்து, சேர்க்கையாற் சிறுமைக்குள்ளானது.

மானிடம் வென்றது என்றான் கம்பன். இன்று தமிழினம் வெட்கித் தலைகுனிகின்றது. மனிதத்தை இழந்து மொழியையும் இழக்கிறதன்றோ. 'வேறு வேறு பாசைஷகள் கற்பாய் வீட்டு வார்த்தைகற்கிலாய் போபோ' எனப் பாட்டிசைத்தார் பாரதி. செம் மொழியாக தமிழின் சொந்தக்காரர் தாய் மொழியை வாய் மொழியாக வேணும் பேச வெட்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு மனிதப் பிறவியைப் போற்றிப் புகழ்ந்தனர் பலர்.

'அரிது அரிது மானுடர் ஆதல் அரிது' - ஔவையார்
'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்' - தாயுமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' - நாவேந்தர் - அப்பர்

'மானுட ஜனனம் பெறுவதற் கரிது' - பாரதி

இம்மனிதம் சற்று விலகிப் போனதினால் விலங்கென நாமம் தீட்டப் பெற்றது. மாவும் மாக்களும் ஐயறிவினைவே என்று தொல்காப்பியர் கணிப்பு. பகுத்தறியும் ஆறறிவுடையவன் மனிதன். இதைப் பகுத்தறிவு என்பர். அறிவியல் பற்றி ஆய்ந்த திருமூலமுனி பத்து அறிவுகளை எடுத்தாண்டுள்ளார்.

'உற்றறிவு ஐந்தும் உணர்ந்தறிவு ஆறு ஏழும்
கற்றறிவு எட்டும் கலந்தறிவு ஒன்பதும்
பற்றிய பத்தும் பல்வகை நாழிகை
அற்றறி யாது அழிகின்ற வாறே' - திருமந்திரம் 741

ஐம்புலன்களின் வழியாய் அறியும் அறிவு, ஐயறிவு. ஐம்புலன்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்தறியும் அறிவு பகுத்தறிவு. அதுவே ஆறாம் அறிவு. பொருள்களின் நன்மை தீமைகளைப் பற்றிய ஆராய்ச்சி உடையது ஏழாம் அறிவு. எட்டாவது அறிவு கல்வியாற் பெற்றது. இந்த எட்டுடன் அனுபவம் பற்றிய அறிவு ஒன்பதாவதாகும். இந்த ஒன்பது அறிவையும் பெறக் காரணமாய் இருந்து உதவும் பரம் பொருளைப் பிரியாது பற்றி நிற்க உதவுவது பத்தாவது அறிவு. இந்த அறிவுநிலைகளை எல்லாம் அறிந்து அதன்படி நடக்க வழிகாணாமல் உயிர்கள் அழிக்கின்றன. இந்த அறியாமையே உயிர்களின் அழிவுக்குக் காரணம்.

ஆக மனிதம் மேம்பாடுடையது. எனவே புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் தவிர்க்க வேண்டியது. 'புண்ணியம் ஆம், பாவம் போம்' - ஔவையார். எவ்வுயிரையும் தன் உயிர்போல் எண்ண வேண்டும். (தாயுமானவர்). எல்லா உயிரையும் நேசிக்க வேண்டும். நல்லது செய்யா விடினும் அல்லது செய்யக் கூடாது. (நல்லது செய்தல் முடியா விடினும் அல்லது செய்தல் தவிருங்கள். புண்ணியம் செய்வார்க்கும் பூவுண்டு நீருண்டு. யாவருக்கும் சாத்தியமானது உண்ணும் போது ஒருகவளம் கொடுத்துச் சாப்பிடுவாய். இதை உள்வாங்கிய திருமூலர் நமக்கோர் பாதை சொன்னார்.

படமாடக் கோயில் பரமற்கு ஒன்றுஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடக் கோயில் பரமற்கு அங்கு ஆகும்.
- திருமந்திரம் 1857

கோயிலில் அமைந்த இறைவனுக்கு ஏதேனும் நிவேதனம் (படையல்) செய்தல், நடமாடும் கோயில் ஆக விளங்கும். சிவன் அடியார்கட்குப் போய்ச் சேராது. ஆனால் நடமாடித் திரியும் சிவனடியார்க்கு அந்தரங்க சுத்தியோடு ஏதேனும் ஒன்றைக் கொடுத்தால் அஃது இறைவனுக்கு மனநிறைவை உண்டாக்கும்.

எனவே சமகாலத்தில் நம்தாயகத்தில் நம் உதிரத்தவர் படும் இன்னல்களைக் களைந்து அவர்களைப் பேண வேண்டியது நம் தலையாய கடமையாம். உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரவசதி, கல்வி வசதி என்பன கிடையாமல் வருந்தும் தாயக உறவுகளுக்கு கை கொடுப்போமாயின் அது இறைவனை நிட்சயமாய் அடையும். சிந்திப்போம். செயற்படுத்துவோம்.
நம்கடன் பணி செய்து கிடப்பதுவே - அப்பர்

- ஆழ்கடலான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாத் தமிழர் இணையம் நடத்தும்

"அன்புக்கரங்கள்" கலை விழாவிற்கு

SELVIN GNANAPRAGASAM MSc

ROUGE VALLEY EDUCATION CENTRE

3351 Ellesmere Road Scarborough
ON M1E 1H1
416– 282-5139

தனது நல்லாதரவைத் தெரிவித்துக் கொள்கின்றார்


RVEC




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் யாழினி கருணாநிதி O.D.

கண் பரிசோதனை நிபுணர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Canadian Tamils"

Head Office:
Toronto
216-31 Progress Ave.
Toronto, On. M1P 4S6 Canada
Tel: 416 240 0078
Fax: 416 240 1601
www.canadiantamilcongress.ca

Branch Office:
Montreal
378-6830, Parc Ave.
Montreal, Qc H3N 1W3
Tel: 514 394 7727
Fax: 514 227 5477
info@canadiantamilcongress.ca

**மார்கழி 18, 2010**

கனடிய தமிழ் இணையம் வழங்கும் கலை நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கனடியத் தமிழர்களாகிய நாம் எமது பண்பாட்டு விழுமியங்களை புலம்பெயர்ந்த மண்ணாகிய கனடாவில் தொடர்ந்தும் நிலைநிறுத்துவது இன்றியமையாத எமது கடமை ஆகும்.

பல்லின மக்களது கலாச்சாரத்தை மதித்து அவர்களிடயே ஒற்றுமையை பேணுவதில் கனடா முன்னணி வகித்து வருகின்றது.

கனடிய தேசத்தின் உயரிய இந்நோக்கத்தை கருத்தில் கொண்டு கனடியத் தமிழர் பேரவை எமது மொழி மற்றும் பண்பாட்டை பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளை ஆதரித்து வருகின்றது. இவ்வகையில் கனடிய தமிழ் இணையத்தின் ஏற்ட்பாட்டில் நடைபெறும் இக்கலை நிகழ்வை நாம் உவகையுடன் வரவேற்கின்றோம்.

இக்கலை நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற கனடிய தமிழ் இணையத்திற்கு கனடியத் தமிழர் பேரவையின் சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

**சு. உமாசுதன்**
**கனடியத் தமிழர் பேரவை**

---

**December 18, 2010**

It gives us great pleasure to extend greetings and a warm welcome to everyone attending the Cultural Event hosted by Canadian Tamil Alliance.

It is imperative that we as Tamil Canadians continue to uphold our values and culture. Canada is renowned for the harmony and respect in which its people coexist and share their culture.

One of the objectives of Canadian Tamil Congress is to uphold Canadian values of multiculturalism and cultural diversity. We are happy to promote events such as this event hosted by Canadian Tamil Alliance that promote Tamil Culture and Language and help uphold our Tamil Identity.

Canadian Tamil Congress wishes Canadian Tamil Alliance a successful cultural event.

**S. Umasuthan**
**General Secretary**
**Canadian Tamil Congress**

Chapters: • Ottawa 613 789 9371 • Vancouver 604 800 5176 • Edmonton 780 660 1211 • Winnipeg 204 219 2018 • Halifax 902 229 5482 • Waterloo 519 404 6707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**To Buy or Sell your Home...**

**Recruiting New and Experienced Agent**
**call me for more info...**

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife Today
Realty Ltd., Brokerage
Independently Owned And Operated

*I ♥ Referrals*



**Ramanan Ramachandran**
Broker/Owner
Cell: 416-670-6467
E-Mail: agentram@gmail.com

31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200

*Proven Results... Go To*
www.agentram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org